
# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்

CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 10
செய்தி 9
மே 2022
விலை ரூ 10/-


## இந்தியாவில் முதல் மே தின கொண்டாட்டத்தின் நூற்றாண்டு விழா



**மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் ஆகியோரின் நலனுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஆணை எண் 2ஐ ரத்து செய்யக்கோரி மாநிலம் முழுவதும் மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பில் ஏப்ரல் 25–ல் ஆர்ப்பாட்டம்**



தலைமையலுவலகம் முன்பு





கடலூர்



கோவை

# மின்கதிர்
## செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**
**மே 2022**


**உள்ளே....**


- ★ இந்தியாவில் மேதின கொண்டாட்டத்தின் நூற்றாண்டு
- ★ மே தின பிரகடணம்
- ★ 2022 மேதின சூளுரை
- ★ தொழிலாளர்களின் உரிமையை பறிக்கும் வாரிய ஆணை 2ஐ ரத்து செய்திட கோரி ஆர்ப்பாட்டம்
- ★ இந்திய மே தினத்திற்கு நூறாண்டு முதல் கொடியை ஏற்றிய சிங்காரவேலர் புகழ் வாழ்க்
- ★ தமிழகத்தின் மின்வெட்டுக்கு யார் காரணம்
- ★ நிலக்கரி தட்டுப்பாட்டால் தவிக்கும் தமிழகம் இதற்கு தீர்வு என்ன?
- ★ மானிட மகளிர் ஆணையம் பெண்களும்



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.





# இந்தியாவில் மேதின கொண்டாட்டத்தின் நூற்றாண்டு

உழைப்பவனின் நெற்றி வேர்வை நிலத்தில் விழும் முன்னேரே அவனுக்கான கூலியை வழங்க வேண்டும் என்று போராடிய மகத்தான தலைவர்களில் ஒருவர் தமிழகத்தின் சிந்தனை சிற்பி சிங்காரவேலர். 1923-ம் ஆண்டு மே 1-ல் சென்னையில் மே தினத்தை கொண்டாடினர். அது தான் இந்தியாவின் மே தினம் முதன் முதலாக கொண்டாடப் பட்டது. அதன் நூற்றாண்டு தேசம் முழுவதும் உழைப்பாளி மக்களால் கொண்டாடப்பட்டது.

முதன் முதலாக 1918-ல் பதிவு செய்யப்பட்ட மெட்ராஸ் லேபர் யூனியனை பதிவு செய்தவர் சிங்காரவேலர். இது தான் முதல் தொழிற்சங்கம்.

1919-ம் ஆண்டில் நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்வை தொடர்ந்து,காந்தி ஒத்துழையாமை இயக்க போராட்டத்திற்கு அனைத்து வழக்குரைஞர்களுக்கும் அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்று தனது வழக்குரைஞர் ஆடையை எரித்தும் இனி எப்போதும் வக்கில் தொழில் பார்க்க மாட்டேன். என் மக்களுக்காகப் பாடுபடுவேன் என்று கூறி ஆங்கில அரசுக்கு தனது எதிர்ப்பையும் காந்திக்கு தனது ஆதரவையும் காட்டியவர்.

உழைக்கும் மக்களின் நலனுக்காக கடைசிவரை அனைத்து கொடுமைகளையும், சிறைவாசத்தையும் அனுபவித்தார். இது போன்ற தலைவர்களால் தான் இன்னும் உழைப்பாளி மக்கள் சில சலுகைகளை, உரிமைகளை அனுபவித்து வருகிறோம். சோசலிசம் தான் அனைத்துக்கும் தீர்வு என தென்னகத்தில் முழுங்கிய இந்த சிவப்பு சிந்தனைக்கு சொந்தக்காரர் சிங்காரவேலர் வழி நடப்போம் மாற்றத்தை நோக்கி பயணிப்போம்.

மரம் அசைய மறுத்தாலும் காற்று விடுவதில்லை என மாவோவின் கூற்றுக்கு ஏற்ப, மின்வாரிய பணியாளர்கள் அமைதியாக இருந்தாலும், மின்வாரிய நிர்வாகமும் அரசும் நம்மை போராட்டத்திற்கு தள்ளி விடுகிறது. ஒரு வாரிய உத்தரவை வெளியிட்டு பெற்று வந்த சலுகைகளை பறித்து விட்டது. தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி தங்களது எதிர்ப்பை பதிவு செய்துள்ளது. பொருத்திருந்து பார்ப்போம்! கடந்த 2020 டிசம்பர் 21-ஐ வாரிய நிர்வாகம் மறந்திருக்காது.


மின்வாரிய நிதி நிலைமை மோசம் என்று சொல்லியே அனைத்து உரிமைகளையும் ஒவ்வொன்றாக பறிக்க நினைப்பது தமிழக அரசுக்கு அழகல்ல.

ஒரு லட்சம் மின் இணைப்புகளை அரசு நிர்ணயித்த காலத்தில் வழங்கியமைக்கு அதிகாரிக்கும் மின்துறை அமைச்சருக்கும் பாராட்டு வழங்கிய முதல்வர், ஊழியர்களை பாராட்டாமல் சென்றது நியாயமல்ல! தளவாட பொருட்கள் வழங்காமல், இந்த பணிகளை செய்ய பிரிவு அலுவலர்களும் முகவர்களும் பட்ட அவஸ்தை சொல்ல இயலாது. உண்மையாக உழைப்பவன் எந்த பாராட்டடையும் எதிர்பார்க்க முடியாது போலும்!

மின்வாரிய நிதி நிலையை சரியல்ல என்று சொல்லி இந்த நிகழ்ச்சிக்கு செலவு செய்த தொகை 2 கோடியே 70 லட்சம் என்பது சரியா என்று கேள்வி மின் ஊழியர்கள் மத்தியில் எழுந்துள்ளது. வாரியத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டு தங்கள் இன்னுயிரை தியாகம் செய்யும் மின்வாரிய பணியாளர்களின் குறைந்தபட்ச கோரிக்கையான காலிப்பணிடங்களை நிரப்புவதற்கு நிதி இல்லை எனச்சொல்வது சரியாகுமா?

மின் தடை ஏற்பட்டால் கோபம் வந்து அலுவலகத்தில் உள்ள பணியாளர்களின் மீது தாக்குதல் நடத்தும் மின் நுகர்வோர்கள். ஊழியர் பற்றாக்குறையால் வேலைப்பளுவோடு பணியாற்றும் மின் ஊழியர்களின் நிலையை புரியாமல் இவர்கள் மீது தாக்குதல் நடத்துவது சரியல்ல!

மின் தடைக்கு ஊழியர்கள் காரணமல்ல தனியாரிடம் அதிக விலைக்கு வாங்க, சொந்த மின் உற்பத்தியை நிறுத்தி திட்டமிடும் நிர்வாகம், தரமான பொருட்கள் வழங்காமல் லாப நோக்கில் தளவாட பொருட்கள் கொள்முதல் இவைகள் தான் காரணம். இந்த நடவடிக்கைகள் மின்துறையை சீரழிக்க செயற்கை ஏற்பாடோ என்ற எண்ணம் எழுகிறது.




விடியல் அரசு, விடியலை ஏற்படுத்தும் என ஓராண்டு காத்திருந்தது தான் மிச்சம் என கருத வேண்டியுள்ளது.

1923- மே 1-ல் இந்தியாவில் அருமை தோழர் சிங்காரவேலர் என்ன கோரிக்கை வைத்தாரோ அதே கோரிக்கைக்காக இன்றைக்கும் நாம் போராடி வருகிறோம்.

இந்த மே நன்னாளில், தேசத்தை, பொதுத்துறையை,வர்க்க ஒற்றுமையை கூட்டுபேர உரிமையை பாதுகாக்க ஒன்றிணைந்து போராடுவோம், முன்னேறுவோம்!




# மே தின பிரகடனம்

சர்வதேச உழைக்கும் வர்க்கத்தின் ஒருமைப்பாட்டு தினமான இன்று சிஐடியு தனது இனிய வாழ்த்துகளை தொழிலாளர்களுக்கும் உழைப்பாளி மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது. மிகப்பெரிய கார்ப்பரேட் மற்றும் அவர்களது ஏஜெண்டுகளாக செயல்படும் அரசாங்கங்ளை எதிர்த்து உரிமைகளை பாதுகாப்பதற்காகவும், தாக்குதல்களை எதிர்த்தும் தொடர்ந்து போராடி வரும் தொழிலாளர்களுக்கும், உழைப்பாளி மக்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறது.

சங்கமாக திரளும் ஆர்வம் இன்று உலகம் முழுவதும் அதிகரித்திருப்பதைக் காணமுடிகிறது. அதிலும் குறிப்பாக இளந்தொழிலாளர்கள் மத்தியில் காணப்படுவதை சிஐடியு வரவேற்கிறது. உழைப்பாளி வர்க்க போராட்டங்கள் உலகம் முழுவதும் முதலாளித்துவத்தின் கோட்டையான அமெரிக்காவிலும் கூட வேகப்பட்டு வருவதையும் சிஐடியு வரவேற்கிறது.

**இந்த மே தினத்தில்,**

இந்த மே தினத்தில், மக்களின் நல்வாழ்வின் மீது அக்கறைகொண்டுள்ள,மிகவும் வலுவான பொது சுகாதார கட்டமைப்புகளைக் கொண்டுள்ள சீனா,வியட்நாம்,கியூபா, வடகொரியா,லாவோஸ் ஆகிய சோசலிச நாடுகள் மிக சிறப்பாக பெருந்தொற்றை எதிர்கொண்டு தங்களது மக்களின் உயிர்களை காப்பதிலும், வாழ்வாதாரத்தைப் பேணிக்காப்பதிலும் ஆற்றிய பணிகள் மிகவும் பாராட்டுதலுக்குரியது என்பதை சிஐடியு பதிவுசெய்கிறது. பெருந்தொற்றை எதிர்கொள்ளக்கூடிய வகையில் பல அரிய மேம்பட்ட விஞ்ஞான தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ள போதிலும், அமெரிக்கா உட்பட பல முதலாளித்துவ நாடுகளில் பல கோடிக்கணக்கான மக்கள் பெருந்தொற்று காலத்தில் உயிர் இழந்துள்ளனர். முதலாளித்துவ நாடுகளில் இலாபமே அரசாங்கத்தின் முன்னுரிமையாக இருந்தது. மக்களின் உயிரைப்பற்றி அக்கறை காட்டவில்லை. இந்த முதலாளித்துவ நாடுகளில் பொது சுகாதார கட்டமைப்புகள் வலுவாக இல்லை. தனியார் மருத்துவ வசதிகளை பெறமுடியாத ஏழைகளும் தொழிலாளர்களுமே இறந்து போயினர்.

அது மட்டுமல்ல, இந்த பெருந்தொற்று காலத்தில் பல முதலாளித்துவ நாடுகள்,நமது இந்திய நாடு உட்பட, உழைப்பாளி மக்களின் வாழ்வாதாரங்களின் மீது கடுமையான தாக்குதலை கட்டவிழ்த்து விட்டன. கடுமையான போராட்டங்களினால் கிடைத்த சங்கம் சேரும் உரிமை, கூட்டுப்பேர உரிமை ஆகியவற்றை பறிக்கும் விதமாக தொழிலாளர் சட்டங்களை திருத்தம் செய்தும் மற்றும் பிற அடக்குமுறை வழிகளைக் கையாண்டும் தொழிலாளி வர்க்கத்தின் மீது கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தன. ஒரு சில கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளை இலாபம் ஈட்டுவதற்காக நவ தாராளமய கொள்கைகளை தீவிரமாக செயல்படுத்த முயற்சித்தன. இதன் விளைவாக பணிநிலைமைகள் மிகவும் மோசமாகின. சம்பளம் குறைந்தது. சமத்துவமின்மை இடைவெளி மிகப்பெரிய அளவில் விரிவடைந்தது. வறுமையும், பசியும் உலக அளவில் அதிகரித்தன. இந்த காலகட்டத்தில், இந்த நிலைமைகளுக்கு முற்றிலும் நேர்மாறாக, சோசலிஸ்ட் சீனாவில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 2030 ம் ஆண்டிற்கு முன்னதாகவே வறுமையை முற்றிலுமாக ஒழித்து சாதனை படைக்கப்பட்டது.

மக்கள் நலன் சார்ந்த சோசலிஸ்ட் அரசுக்கும், இலாப நோக்கு கொண்ட முதலாளித்துவ அரசுகளுக்கும் இடையிலான வேறுபாட்டை கோவிட் பெருந்தொற்று மிக தெளிவாக தோலுரித்துக்காட்டியது.

சோசலிஸ்ட் நாட்டு மக்களை இந்த மே தினத்தில் சிஐடியு வாழ்த்துகிறது. தங்கள் நாட்டில் சோசலிஸ்ட் அமைப்பை பாதுகாக்க போராடும் அவர்களோடு சிஐடியு இணைந்து நிற்கிறது. தங்கள் தாய்நாட்டை பாதுகாக்க போராடும் பாலஸ்தீன மக்களுடன் இணைந்து நிற்கிறது சிஐடியு. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துணையோடு இஸ்ரேல் படைகள் பாலஸ்தீன அப்பாவிமக்கள் மீதும்,நிராயுதபாணியான குழந்தைகள்,பெண்கள் மீதும் நடத்தும் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை சிஐடியு வன்மையாக கண்டிக்கிறது.

அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்திய அரசுகளின் தூண்டுதலினால் நடைபெறும் ஏகாதிபத்திய போர்களை சிஐடியு வன்மையாக எதிர்க்கிறது. இத்தகைய போர்களின் மூலம் எண்ணெய் வளங்களையும், இயற்கைதாது வளங்களையும், கடல்வழி போக்குவரத்து மேலாண்மையையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, அமெரிக்கா ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறது. தங்களது அரசியல் செல்வாக்கையும், ராணுவ பலத்தையும் பயன்படுத்தி தங்களது உலக ஏகாதிபத்திய செல்வாக்கை விரிவுபடுத்த இயலாவிட்டாலும் தக்கவைக்க முயற்சிக்கிறது. இன்றும் பல நாடுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசுகளை அகற்றிவிட்டு, தனது ஆணைகளை தவறாமல் நிறைவேற்றும் அடிமை அரசுகளை நிறுவுகிறது. இத்தகைய முறைகளில் தனது ஏகாதிபத்திய மேலாதிக்கத்தை விரிவடையச் செய்ய முயற்சிக்கிறது. அமெரிக்கா உலகின் பல்வேறு பகுதிகளில் பொருளாதார, அரசியல், ராணுவ தந்திரங்கள் மூலம் ஆயுத சண்டைகளை தூண்டிவிடுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காட்டுமிராண்டித் தனமான ஏகாதிபத்திய தந்திரத்தின் பகுதியே அண்மையில் ஏற்பட்டுள்ள உக்ரைன் யுத்தம்.

நவீன தாராளமயத்தை எதிர்த்தும்,அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்பல நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் மேற்கொண்டுவரும் தலையீடுகளை எதிர்த்தும் உலகம் முழுவதும் பல நாடுகளில் குறிப்பாக, லத்தீன் அமெரிக்க நாடுகளில் மக்கள் அதிகளவில் கலந்துகொள்வது குறித்து சிஐடியு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது. உழைக்கும் வர்க்கம் இத்தகைய போராட்டங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல நாடுகளில் இத்தகைய

போராட்டங்களின் பலனாக முற்போக்கான,மக்கள்நலன் சார்ந்த அரசுகள் ஆட்சிக்கு வந்துள்ளன. இந்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசாங்கங்கள் நவீன தாராளமய கொள்கைகளை கைவிட்டு, பன்னாட்டு நிதியம், ஏகாதிபத்திய சக்திகளின் மிரட்டல்களை மக்கள் ஆதரவுடன் புறந்தள்ளி,மக்கள் நலன்சார்ந்த கொள்கைகளை அமல்படுத்தும் என சிஐடியு நம்பிக்கை தெரிவிக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை உழைக்கும் வர்க்கத்தினரிடையே உயர்த்துவது என்பது நவீன தாராளமய சுரண்டல் முறையை எதிர்த்த ஒன்றுபட்ட போராட்டங்களோடு பின்னிப்பிணைந்தது ஆகும்.இந்த உணர்வு உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பது ஆகும். இத்தகைய உணர்வுகளை தொழிலாளி வர்க்கத்தினரிடையே உயர்த்துவதற்கும், ஆழப்படுத்து வதற்கும் இந்த மே தினத்தில் சிஐடியு தனது உறுதியை மீண்டும் வலியுறுத்துகிறது.

**இந்த மே நன்னாளில்,**

இந்த ஆண்டு மார்ச் 28-29 ஆகிய இரு தினங்கள் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை மாபெரும் வெற்றியாக்கி உழைக்கும் வர்க்கத்திற்கு சிஐடியு தனது பாராட்டுதல்களையும்,வாழ்த்துகளையும் உரித்தாக்கிக் கொள்கிறது. அரசாங்கங்களின் பலவிதமான அடக்குமுறைசட்ட பயமுறுத்தல்களையும், முதலாளிகளின் பழிவாங்கல் களையும்,நீதித்துறையின் தலையீட்டையும் எதிர்கொண்டு உழைப்பாளி வர்க்கம் வேலைநிறுத்தத்தை மாபெரும் வெற்றியாக மாற்றியிருக்கிறார்கள். தொழிற் சங்கங்களின் கூட்டுப்போராட்டம் தொழிலாளர்களின் கோரிக்கையை மட்டுமல்லாது, விவசாயி, விவசாயத் தொழிலாளி,சாதாரண மக்கள் ஆகியோரின் கோரிக்கைகளையும் முன்வைத்து போராடியது. ‘ஆத்மநிர்பாட்ரா’ என்று போலி முழக்கங்ளை மக்களிடையே முழங்கிக்கொண்டே,நம்நாட்டின் சுயசார்பு உற்பத்தி திறனுக்கு வேட்டுவைக்கும் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசாங்கத்தின் நாசகர கொள்கைகளை எதிர்த்து இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றது.நமது நாட்டின் இயற்கை வளங்கள், நிலங்கள், தாதுவளங்கள், நீர்நிலைகள், வனங்கள்,கட்டமைப்புகள், நாட்டின் சொத்துகள், மக்**கள்** பணத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் போன்ற நாட்டின் ஒட்டுமொத்த செல்வத்தையும் தனது உள்நாட்டு மற்றும் பன்னாட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஒப்படைக்கிறது மோடியின் பா.ஜ.க.அரசாங்கம். தனியார்மயம், தேசிய பணமாக்கல், நிலம் பணமாக்கல் ஆகிய திட்டங்கள் எல்லாம் பொதுச் சொத்துகளை தனியாருக்கு தாரைவார்ப்பதற்காகத்தான்.

**“தேசத்தை பாதுகாப்போம், மக்களை பாதுகாப்போம்”** என்ற முழக்கத்தோடு நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் பங்கேற்ற கோடிக்கணக்கான உழைப்பாளிகளுக்கு சிஐடியு தனது செவ்வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறது. இந்த வேலைநிறுத்தம் பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றது. பல மாநிலங்களில் இதனுடைய தாக்கத்தை கிராமப்புறங்களில் காணமுடிந்தது.

பல்வேறு எதிர்ப்பு போராட்டங்களில், சாலை மறியலில்,ரயில் மறியலில் பங்கேற்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், முற்போக்காளர்கள் என இந்த வேலைநிறுத்தத்தில் பங்கேற்று, ஆதரவளித்து வெற்றிபெறச் செய்த கோடிக்கணக்கானவர்களுக்கு சிஐடியு தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்யும் அடிப்படை உழைக்கும் வர்க்கம், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், தொழிலாளர்கள்

ஆகியோரின் ஒன்றுபட்ட போராட்டங்கள் வளர்ந்து வருவதை சிஐடியு மிகுந்த உற்சாகத்துடன் பாராட்டுகிறது.இந்த ஒற்றுமையை கிராம கமிட்டிகள் வரை கொண்டுசெல்லவேண்டும் என்ற அவசியத்தை இது உறுதிப்படுத்துகிறது. தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் பொதுவான கோரிக்கைகளுக்காக ஒன்றுபட்ட வலுவான போராட்டங்களை முன்னெடுப்பதற்கு சிஐடியு உறுதிபூணுகிறது. இத்தகைய ஒன்றுபட்ட போராட்டங்கள் ஒற்றுமையை வலுப்படுத்தவும், உழைக்கும் மக்களின் ஜனநாயக போராட்டங்களை வலுப்படுத்தவும் உதவும் என சிஐடியு நம்பிக்கை கொள்கிறது.

**இந்த மே தினத்தில்,**

நவீன தாராளமய கொள்கைகளை தடுத்துநிறுத்தவும், எதிர்க்கவும் புத்துணர்வுடன் ஒன்றுபட்ட போராட்ட உணர்வை உயர்த்த சிஐடியு தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது. இத்தகைய ஒன்றுபட்ட போராட்டங்கள் தொழிலாளர்களுக்கான, மக்களுக்கான மாற்று கொள்கைகளை உருவாக்கும் போராட்டத்தை வலுப்படுத்தும். முன்னர் நடைபெற்ற பொது வேலைநிறுத்தங்கள், துறைவாரியான வேலைநிறுத்தங்கள் கற்றுக்கொடுத்ததைப்போலவே, தொழிலாளர்களை சென்றடைந்தால், தொழிலாளர்கள் தங்களது கடுமையான சூழ்நிலைகளிலும் போராடுவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதையும்,எத்தகைய தியாகங்களை செய்வதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்ற பாடத்தையும் இந்த வேலைநிறுத்தமும் கற்றுக்கொடுத்துள்ளது. அவர்களின் அன்றாட பிரச்னைகளையும் அதன் பின்னாலுள்ள அரசின் கொள்கைகளையும் தெளிவாக எடுத்துரைத்து புரியவைத்தால் அவர்கள் போராடுவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்ற பாடத்தையும் கற்றுக்கொடுத்துள்ளது. தனது ஊழியர்கள்,உறுப்பினர்கள், செயல்வீரர்கள் ஆகியோரை இந்த கடமையை மிகவும் துரிதமாகவும். மிகுந்த பொறுப்புணர்வுடனும் கொண்டு சென்று, உழைக்கும் வர்க்கத்தை வலுவான ஒன்றுபட்ட உயர்மட்ட போராட்டங்களுக்கு தயார்படுத்தவேண்டும் என சிஐடியு அறைகூவல் விடுக்கிறது.

இந்துத்வா சித்தாந்தத்தால் தாக்குதலுக்கு உள்ளாகும் நமது மக்களின் ஒற்றுமையை தனது முழு சக்தியையும் திரட்டி சிஐடியு பாதுகாக்க சபதம் ஏற்கிறது. ஆர்.எஸ்.எஸ்.மற்றும் பா.ஜ.க.உள்ளிட்ட சங்பரிவாரங்களின் ஒரு அரசியல் திட்டம் தான் இந்துத்வா. தங்களது தேர்தல் ஆதாயத்திற்காக இந்துக்களின் மத நம்பிக்கைகளை பயன்படுத்தி மத ரீதியாக மக்களை பிரித்தாளுகிறது. இந்துத்வா என்பது ஒரு அரசியல் திட்டம் தான். இந்து மதத்திற்கும் அதற்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்கிறார் சாவர்கர். மக்களை மத,சாதி,பிராந்தியம்,மொழி ரீதியாக மக்களை ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் பரிவாரங்கள் பிளவுபடுத்துவதை சிஐடியு வன்மையாக எதிர்க்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இந்து, முஸ்லீம்,கிருத்துவ திருவிழாக்களின் போது கலவரங்களைத் தூண்டிவிட்டு சமூகங்களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்துகின்றன. ஹிஜாப், ஹலால் இறைச்சி, ஆஸாம்,கோயில்களின் அருகாமையில் முஸ்லீம்கள் கடைகள் வைக்கக்கூடாது, ராமநவமி அன்று மாட்டிறைச்சி உண்ணக்கூடாது, பரிமாறக்கூடாது போன்ற பிரச்னைகளை உருவாக்கி அபாயகரமான தங்களது நோக்கத்தை நிறைவேற்ற சங் பரிவாரங்கள் முயற்சிக்கின்றன.

பசு பாதுகாப்பு இயக்கம் என்ற பெயரில் முஸ்லீம்களும், தலித்களும் தாக்கப்படுகிறார்கள்.பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களின் பங்கேற்போடு தலித்

மற்றும் பெண்களை பாரபட்சமாக நடத்துவதை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார்கள். சமூகத்தில் அவர்களின் இடத்தை மனுஸ்மிருதி அடிப்படையில் வரையறுக்க முயல்கிறார்கள். பெண்களின் மீதான வன்முறைகள், பாலியல் தாக்குதல்கள், குழந்தைகளை கொலைசெய்தல், சாதிமறுப்பு திருமணம் செய்துகொள்ளும் தம்பதியினரை குறிப்பாக தலித் இளைஞர்களை தாக்குவதும், கொலைசெய்வதும் மிகவும் அதிகரித்துள்ளது.

மோடி தலைமையிலான பா.ஜ.க.அரசாங்கம் தொடர்ச்சியாக நமது நாட்டின் மதசார்பற்ற அடித்தளத்தை அழித்தொழித்துவிட்டு,நமது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு பதிலாக மனுஸ்மிருதியின் வழிகாட்டுதலின்படி இந்து ராஷ்டிராவை அமைக்க முயற்சிப்பதை சிஐடியு வன்மையாக எதிர்க்கிறது. குடியுரிமை திருத்த சட்டத்தை எதிர்கட்சிகளின் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே பா.ஜ.க.அரசாங்கம் நிறைவேற்றியது. குடியுரிமை திருத்த சட்டத்தில் மதத்தை ஒரு நிபந்தனையாக பா.ஜ.க. அரசாங்கம் முன்வைத்தது. இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த முஸ்லீம் சிறுபான்மையினரை இரண்டாந்தர குடிமகன்களாக கருதுகிறது பா.ஜ.க.அரசாங்கம். பயங்கரவாத நடவடிக்கை தடுப்பு சட்டம், தேசபாதுகாப்பு சட்டம் போன்ற அடக்குமுறை சட்டங்கங்களை அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்ப்பவர்கள் மீது செலுத்துவதை சிஐடியு வன்மையாக எதிர்க்கிறது. அறிவுஜீவிகள், பத்திரிக்கையாளர்கள்,மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கவாதிகள் ஆகியோரை பிணையில் வரமுடியாதவகையில் சிறையில் அடைக்கிறது.தகவல் ஊடகங்களை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது. பொய் பிரச்சார ஊடகங்கள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் உண்மையை தெரிவிக்கும் ஊடகங்கள் துன்புறுத்தப்படுகின்றன. மோடி ஆட்சியில் இந்தியா **'தேர்தல் எதேச்சாதிகார நாடு தாராள ஜனநாயக நாடு அல்ல'** என்ற கூற்றுக்கேற்ப இந்தியாவில் ஜனநாய உரிமைகள் நசுக்கப்படுகின்றன. தனது கார்ப்பரேட் நன்கொடையாளர்களிடமிருந்து வசூலித்த பணத்தை தாராளமாக தேர்தலில் ஆளும் கட்சியான பா,ஜ,க. பயன்படுத்துகிறது. தேர்தல் கேலிக்கூத்தாக மாறிவிட்டது. தேர்தல் பத்திரங்கள் மூலமாக பா.ஜ.க. பெரும் தொகைகளை தேர்தல் நிதியாக பெறுகிறது. தங்களது நலன்களை , பா.ஜ.க. பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் பெருமளவு நிதியினை கார்ப்பரேட்கள்வாரிவழங்குகின்றனர்.

வலதுசாரி கட்சியான பா.ஜ.க.வுக்கு இத்தகைய ஆதரவை இந்தியாவில் கார்ப்பரேட்கள் தருவது முதலாளித்துவம் இன்று சந்திக்கும் நெருக்கடியினால்தான். நவீன தாராளமய கொள்கையின் மீது மக்கள் வெளிப்படுத்தும் கோபாவேசங்களை கொண்டு மக்களுக்கு சாதகமான மாற்று கொள்கைகளை முன்வைத்து போராடும் இடதுசாரிகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் பொருட்டும் கார்ப்பரேட்கள் வலதுசாரி சக்திகளுக்கு ஆதரவு அளிக்கின்றனர். இது இடதுசாரிகளை புறந்தள்ளும் ஏற்பாடே ஆகும். வலதுசாரிகள் நவீன தாராளமய கொள்கைகளுக்கு எதிரானவர்களல்லர்.ஆனால் நவீன தாராளமய கொள்கைகளுக்கு எதிரான மக்களின் கோபாவேசத்தை மடைமாற்றி பிற பிரச்னைகளின் மீது திருப்பி விடுகின்றனர். சாதி, மதம்,இனம்.மொழி.பிராந்தியம், பாலினம் போன்ற பல வடிவங்களில் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி, மக்களின் ஒற்றுமையை சிதைக்கின்றனர். ஒன்றுபட்ட போராட்ட வலிமையை பலவீனப்படுத்துகின்றனர். மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற போராட்டங்களையும், எதிர்ப்புகளையும் எதேச்சாதிகார,பாசிஸ்ட் வடிவங்களில் நசுக்குகின்றனர். இன்றைக்கு முதலாளித்துவம் அமைப்பு ரீதியாக

நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. மக்களின் மீது தாக்குதல்களை தொடுக்காமல், மக்களின் மீது சுமையை ஏற்றாமல் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முதலாளித்துவத்தால் இயலாது என்பதை நமது நாட்டின் உழைக்கும் வர்க்கம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். சமூகத்தில் மதபிளவுகளை செயல்படுத்தும் வலதுசாரி அரசாங்கங்களின் துணையுடன் மக்களின் போராட்டங்களை நசுக்காமல், முதலாளித் துவத்தால் தங்களது இலாபத்தையும் , செல்வத்தையும் பாதுகாக்க முடியாது. திவாலாகும் முதலாளித்துவ அமைப்பை குறித்த இந்த தெளிவான புரிதலோடு தொழிலாளர் வர்க்கம் எதிர்தாக்குதல்களைத் தொடுக்கவேண்டும்.

**இந்த மே நன்னாளில்**

அன்றைய மெட்ராஸ் பட்டணத்தில் 1923ம் ஆண்டில் முதல் மே தினத்தை செங்கொடி ஏற்றி தோழர் சிங்காரவேலர் கொண்டாடிய நூற்றாண்டு துவக்கமாக அமைகிறது இந்த ஆண்டு.

பிரிவினைவாத சக்திகளை தோற்கடித்து ,நமது ஒற்றுமையை வலுப்படுத்தவும், அனைத்து தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தவும்,விவசாயிகளுடன் ஒற்றுமையை வலுப்படுத்தவும்,அனைத்து பகுதி உழைக்கும் மக்களுடன் ஒற்றுமையை வலுப்படுத்தவும்,சமூகத்திலுள்ள முற்போக்கு சக்திகளுடன் ஒற்றுமையை வலுப்படுத்தவும் இந்த மே தினத்தில் சபதம் ஏற்போம்.

துறைவாரியான கோரிக்கைகளுக்கான ஒன்றுபட்ட போராட்டங்களை தீவிரப் படுத்துவோம்,நமது பொதுகோரிக்கைகளுக்கான ஒன்றுபட்ட போராட்டத்தை தீவிரப் படுத்துவோம், உலகத்திலுள்ள உழைக்கும் மக்களின் இன்றைய துன்பங்களுக்கெல்லாம் காரணமான நவீன தாராளமய கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்தை தீவிரப் படுத்துவோம் என சூளுரைப்போம்.

முதலாளித்துவ அமைப்பின் தோல்வியை தோலுரித்துக்காட்ட, நமது ஒன்றுபட்ட போராட்டங்களை உயர்நத மட்டங்களுக்கு கொண்டு செல்வோம். உலகத்தின் செல்வத்தை உருவாக்கும் தொழிலாளர்கள் மற்றும் அனைத்துப்பகுதி உழைக்கும் மக்களின் அடிப்படை தேவைகளான உணவு,ஆரோக்யம்,கல்வி,வீடு ஆகியவற்றை நிறைவேற்றிட போதிய செல்வம் இருந்தும் அதனை நிறைவேற்ற முதலாளித்துவத்தால் முடியவில்லை.ஆனால் இவைகளை சுருட்டிக்கொண்டு போவது விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசில கொழுத்த பணக்காரர்கள் தான். மக்கள் நலன்சார்ந்த மாற்றுக் கொள்கைகளுக்காக போராட நாம் தயாராவோம்.

**மே தினம் வாழ்க...**

**உழைக்கும் வர்க்க ஒருமைப்பாடு ஓங்கட்டும்...**

**தொழிலாளி விவசாயி ஒற்றுமை ஓங்குக...**



**சோசலிசம் வாழ்க...**

**முதலாளித்துவம் வீழட்டும்....**



# 2022 மே தின சூளுரை




உயிர் பறித்த கொரோனா பெருந்தொற்று உச்சத்தில் இருந்த நிலையிலும், சென்ற இரண்டு மே தினங்களில், வீடுகளிலும் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலக வாசல்களிலும் செங்கொடி ஏற்றி தியாகிகளுக்கு வீர வணக்கம் செய்ய நாம் தவற வில்லை. பல லட்சக்கணக்கான மக்களின் உயிர்களை பெருந்தொற்றுபலிகொண்டது. தொழிற்சங்க இயக்கத்தில் தனது வாழ்வையே அர்ப்பணித்து தொண்டாற்றிய தலைவர்கள், செயல் வீரர்கள் பலர், இந்திய அளவிலும் தமிழ்நாட்டிலும் இந்தக் கொடிய கிருமி தாக்குதலால் நம்மை விட்டு மறைந்தனர். அவர்களுக்கு இந்த மே தினத்தில் அஞ்சலி செலுத்தி வீர வணக்கம் செய்கிறோம்.

கொரானாவை விட கொடியதாக ஒன்றிய அரசு இருக்கிறது. பொது முடக்கத்தை அறிவித்த பின்பு தொழிலாளர்களுக்கு முழுச் சம்பளம் வேண்டும் என உத்தரவு போட்டது. முதலாளிகள் இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு செய்தவுடனேயே, உத்தரவை திரும்பப் பெற்றுக்கொள்வதாக ஒன்றிய அரசு அறிவித்தது. நீதிமன்றத்தில் எதிர் வழக்காடவே இல்லை. தொழிலாளிக்கு 50 நாட்களுக்கு மட்டும் சம்பளம் கொடுக்க முதலாளிகள் முடிந்தால் முயற்சிக்கலாம் என்றும், கொடுக்காத முதலாளிகள் மீது அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்றும் உச்சநீதிமன்றம் ஒரு மோசமான தீர்ப்பை வழங்கியது.

பல கோடிக்கணக்கான தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்பு அளித்த சிறு, குறு, நடுத்தர தொழில்களில் மூன்றில் ஒரு பங்கு செத்துப் போய்விட்டன. மீதம் இருப்பவையும் கூட பெயருக்கு ஓட்டப்படுகின்றன; பழைய உற்பத்தி நிலைக்கு செல்ல முடியவில்லை. ஒன்றிய அரசு இந்த தொழில்களை மீண்டும் செயலூக்கப்படுத்த உருப்படியான திட்டம் எதையும் கொண்டு வரவில்லை.

ஆறு கோடிக்கும் மேற்பட்ட தொழி லாளர்கள் வேலை இழந்து விட்டார்கள். கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையின்மை அதிகரித்துவிட்டது. 75% வீடுகளின் மாத வருவாய் ரூபாய் 5,000 என்ற அளவிலேயே இருப்பதாக ஆய்வு கூறுகிறது. உலகில் மகிழ்ச்சியற்ற நாடுகளின் பட்டியல்

அண்மையில் வெளியிடப்பட்ட போது, மகிழ்ச்சியற்ற சோக நிலையில் மக்கள் வாழும் 10 மோசமான நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. சென்ற ஆண்டில் உலகிலேயே கடும் பட்டினி கிடக்கும் 15 நாடுகளில் ஒன்றாக இந்தியா இருப்பதை உலக பட்டினி குறியீடு ஆய்வு வெளிப்படுத்தியது.

விவசாயிகளும் சாதாரண மக்களும் கடன் வலையில் சிக்கி மாய்வது மட்டுமல்ல, நமது நாடே அப்படித்தான் இருக்கிறது. விடுதலை அடைந்த பின் 67 ஆண்டு காலத்தில் இந்தியா வாங்கிய கடன் 55,87,449 கோடி. 'வளர்ச்சி நாயகன்' மோடி ஆட்சி செலுத்தும் இந்த ஏழு ஆண்டுகளில் மட்டும் 24,12,077 கோடி சேர்ந்து மொத்தம் 79,99,526 கோடி ஆகியுள்ளது. பிறந்த குழந்தை மீது கூட 62,000 ரூபாய் கடன் உள்ளது.

இவ்வளவு கடும் நெருக்கடிக்கு நாடும் மக்களும் ஆட்பட்டுள்ள நேரத்தில், இந்திய முதலாளிகளின் வருமானம் முன்னெப் போதுமில்லாத வேகத்தில் அதிகரித்துள்ளது. முகேஷ் அம்பானியின் சொத்து 124%ம், கவுதம் அதானியின் சொத்து 480%ம் உயர்ந்துள்ளன. இந்தியாவில் அதிக வருமானம் வருகிற ஒரு கோடிப் பேர் இந்தியாவின் மொத்த செல்வத்தில் 73%க்கு உரிமையாளர்களாக இருக்கிறார்கள்.

இது ஒன்றும் எதேச்சையாக நிகழ்ந்தது அல்ல. புதிய செல்வத்தை உற்பத்தியோ, சேவையோ நடைபெற வேண்டும் அதற்கு மூலதனம் உழைப்பு ஆகிய இரண்டும் இன்றியமையாதவை. மூலதனத்தை பெருமுதலாளிகளுக்கு மோடியின் அரசு கிட்டத்தட்ட இலவசமாகவே தருகிறது. அதானிக்கு பொதுத்துறையில் கட்டப்பட்ட விமான நிலையத்தை 12 ஆயிரத்து 770 கோடி ரூபாய்க்கு ஒன்றிய அரசு விற்றது. அவ்வளவு பெரும் தொகையை அதானி பொதுத்துறை வங்கியிடம் இருந்து கடனாக வாங்கி கட்டினார். ஓராண்டில் அந்த வங்கிக்கடனை மோடி அரசு தள்ளுபடி செய்து விட்டது. அதாவது இலவசமாக விமான நிலையம் அவருக்கு தரப்பட்டுவிட்டது. ஏர் இந்தியாவுக்கு 50 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்து விமானங்கள் வாங்கினார்கள். அவற்றையும் சேர்த்து 144 விமானங்களை டாடாவிடம் வெறும் 18 ஆயிரம் கோடிக்கு விற்று விட்டார்கள். பிஎஸ்என்எல் எனும் பொதுத்துறை உருவாக்கி வைத்துள்ள ஆயிரக்கணக்கான டெலிகாம் கோபுரங்களை அம்பானியின் ரிலையன்ஸ் கட்டணமே தராமல் பயன்படுத்திக் கொள்கிறது. ஆனால் இன்னும் 4ஜி வழங்கப்படாமல் பிஎஸ்என்எல் கொல்லப்படுகிறது.

"தேசிய பணமாக்கல் திட்டம்" என்ற பெயரில் பொதுத்துறை நிறுவனங்கள், கார்ப்பரேட் பெரு முதலாளிகளுக்குத் தரப்படுகின்றன. 26,700 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகள், 28,698 கிலோ மீட்டர் நீளமுள்ள மின் கோபுரங்கள் மற்றும் கம்பி வழித்தடங்கள், 8154 கிலோ மீட்டர் நீளமுள்ள இயற்கை எரிவாயு குழாய்கள், 3,930 கிலோ மீட்டர் நீளமுள்ள பெட்ரோலிய எண்ணெய் குழாய்கள், 2,10,00,000 மெட்ரிக் டன் பொருட்களை வைக்கக் கூடிய மத்திய கிடங்குகள், 400 ரயில் நிலையங்கள், 90 பயணி ரயில்கள், 265 ரயில்வே குட்ஷெட், கொங்கன் ரயில்வே முழுமையாக, 2,86,000கிலோ மீட்டர் நீளமுள்ள ஃபைபர்களோடு, 14,917 டெலிகாம் கோபுரங்கள், 25 விமான நிலையங்கள், 31 பெரிய துறைமுகங்கள், 2 பெரிய விளை யாட்டு அரங்குகள் எல்லாமும் தனியாரிடம் தரைமட்ட விலைக்கு விற்கப்படுகின்றன அல்லது எந்தப் பணமும் இல்லாமல் 50 முதல் 99 ஆண்டுகள் வரை தரப்படுகின்றன. கோடிக்கணக்கான ரூபாய்களை வருமானமாக ஈட்டித் தருகிற பொதுத்துறை நிறுவனமான எல்ஐசி கூட தனியாருக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட மூலதனமே போடாமல் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பொதுத்துறை நிறுவனங்கள் தனியாரிடம் தரப்பட்டாயிற்று. அவற்றை இயக்கும் போது தொழிலாளர்களுக்கு ஊதியம் மற்றும் வேலை பாதுகாப்பை தர வேண்டிய சட்டபூர்வ

கடமையிலிருந்து முதலாளிகளை விடுவிக்க, 44 தொழிலாளர் சட்டங்களை 4 சட்டத் தொகுப்புகளாக மோடி அரசு சுருக்கி இருக்கிறது. இனிமேல் நிரந்தரத் தொழிலாளர் களை யாருமே இருக்க முடியாத நிலை உருவாக்கப் பட்டுள்ளது முதலாளி நினைத்த ஒருவரை வேலைக்கு வைக்கலாம், அவரை அடிமையாக நடத்தலாம், ஊதியம் உரிமை என்று பேசினால் வேலையை விட்டு உடனடியாக நீக்கி விடலாம் என முதலாளிகளுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. தொழிற்சங்கம் வைக்கவே இயலாத அளவுக்கு விதிகள் கடுமையாக்கப் படுகின்றன. தொழிலாளர்கள் விரும்பும் தலைவரை தேர்ந்தெடுக்க விடாமல் தடுக்கவும் சட்டத்தால் முடியும்.

4,000 கோடி ரூபாய்க்கு மேல் நிதி இருப்பு வைக்கப்பட்டுள்ள கட்டுமான நல வாரியம் மற்றும் உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியங்களை ஒன்றிய அரசு புரட்டிப் போடுகிறது. இதுவரை மாநில அரசு அதிகார எல்லைக்குள் இருந்த நல வரி வசூல் அதிகாரமும், நிதிப் பலன் வழங்கிய திட்டங்களும் ஒன்றிய அரசால் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கடந்த 10 ஆண்டு ஆட்சிக் காலத்தில் அஇஅதிமுக அரசு எந்த முத்தரப்பு கூட்டத்தையும் நடத்தவில்லை. தொழிலாளர் துறை மீது எந்த கண்காணிப்பும் இல்லாத நிலை இருந்தது. புதிய அரசு பொறுப் பேற்றவுடன் இது மாறும் என தொழிலாளர்கள் பெரும் எதிர்பார்ப்போடு இருந்தனர். ஆனாலும் இன்னும் பழைய நிலையே தொடர்வது வியப்பளிக்கிறது.

நான்கு சட்டத்தொகுப்புகளுக்கான தமிழ்நாடு மாநில விதிகளை அவசர அவசரமாக அமைச்சரின் வழிகாட்டுதலையும் மீறி இணையதளத்தில் வெளியிட்டு இருக்கின்றனர். வெகுவிரைவில் ஒன்றிய அரசின் சட்ட தொகுப்புகளை இந்தியா முழுமையும் அமலாக்க தமிழ்நாடு தொழிலாளர் துறை துணை செய்துகொண்டு இருக்கிறது.

வேளாண் சட்டங்களை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியதைப்போல, இந்த தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் எதிர்த்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்து கொண்டே சென்றாலும், இந்தியாவில் அது உயர்த்தப்பட்டு கொண்டே இருக்கிறது. உலக அளவில் மிக அதிக விலையில் பெட்ரோல் விற்கப்படும் நாடு மற்றும் மூன்றாவது நிலையில் அதிக விலை கொண்ட சமையல் எரிவாயு விற்கும் நாடு என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அனைத்துப் பொருள்களின் விலையும் சாதாரண மக்களின் கைக்கெட்டாத வகையில் உயர்ந்து கொண்டே போகின்றன.

இவை அனைத்தையும் திசைதிருப்ப, மதம் சாதி ஆகியவற்றையே மையமாக வைத்து தொடர்ச்சியாக இந்தியா முழுமையும் ஏதேனும் கலகங்களை பாஜக-ஆர்எஸ்எஸ் ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது. தமிழகத்திலும் கூட அது தனது மதவெறியூட்டும் செயல்களை திட்டமிட்டுத் தூண்டி வருகிறது. மனிதாபி மானமற்ற செயல்கள் அனைத்தையும் மதச்சாயம், சாதிச் சாயம் பூசி நியாயப் படுத்துகிறது. அஇஅதிமுக தனது தனித் தன்மையை இழந்து, கொஞ்சம் கொஞ்சமாக பிஜேபியால் விழுங்கப்பட்டு வருகிறது.

இப்படிப்பட்ட பன்முனை தாக்குதல்கள் உழைக்கும் மக்கள் மீது தொடுக்கப்பட்டு வரும் வேளையில், இவற்றுக்கு எதிராக ஒற்றுமையோடு மார்ச் 28,29 தேதிகளில் அகில இந்திய வேலைநிறுத்தத்தை, தமிழ்நாட்டு தொழிலாளர்கள் மிக வெற்றி கரமாக நடத்திக் காட்டினார்கள். போக்குவரத்து கழக பேருந்துகள், ஆட்டோக்கள் உள்ளிட்டவை சாலைக்கு வராமல் நிறுத்தப் பட்டு, வேலைநிறுத்தம் மக்கள் உணரத் தக்கதாக நீண்ட காலத்துக்குப் பின்பு அமைந்தது.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் நேரில் அழைத்துப் பேசி கேட்டறிந்தது குறிப்பிடத்தக்கதாகும். பிஜேபி, அதிமுக தவிர அனைத்து கட்சிகளும்

வேலைநிறுத்தத்தை ஆதரித்தன. வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வதற்கு உழைத்த அனைவருக்கும் நன்றி பாராட்டு கிறோம்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் அந்த நாட்டு மக்கள் கடும் துயரங்களுக்கு ஆட்பட்டு இருக்கிறார்கள். மோடி அரசாங்கம் இன்னும் தொடரு மேயானால் இதே நிலைக்கு இந்தியாவும் தள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

ஒன்றிய அரசின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகள், மக்களுக்கும் தொழிலாளர் களுக்கும் விரோதமான செயல்பாடுகள், மதவெறியை தூண்டி விட்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பரப்பப்படும் வெறுப்பு அரசியல், மனிதனில் உயர்வு தாழ்வு சொல்லும் சாதி ஆணவங்கள், நமது மொழி, பண்பாட்டை அழிக்கும் உள்நோக்கத்தோடு இந்தியை திணிக்கும் முயற்சிகள் உள்ளிட்ட எல்லா ஆதிக்க நடவடிக்கைகளையும் எதிர்ப்பது தொழிலாளியின் கடமையாகும்.

இந்தியாவிலேயே முதல் தடவையாக சென்னை துறைமுகம் மற்றும் திருவல்லிக் கேணி கடற்கரையில் தோழர் சிங்காரவேலர் 1923ஆம் ஆண்டில் செங்கொடி ஏற்றி மே தினத்தை கொண்டாடினார். இந்தியாவில் மே தினம் கொண்டாடப்பட்டதன் நூற்றாண்டு இப்போதிருந்து தொடங்குகிறது. முதல் மே தினத்தை நடத்திய தோழர் சிங்காரவேலர் அவர்களும் சுப்பிரமணிய சிவா அவர்களும் சிறை தண்டனைக்கு உட்பட்டு சொல் லொணாத சித்திரவதைகளுக்கு ஆளாகினர். ஆனால் தொழிலாளர்களுக்காக, நாட்டு விடுதலைக்காகவும் ஓய்வின்றி இறுதி மூச்சு வரை பாடுபட்டனர்.

செங்கொடி ஏந்தி மக்கள் நலனுக்காக சர்வபரித்தியாகம் செய்து செய்த மாமனிதர் களின் வாரிசுகளாகிய நாம், இந்திய நாட்டையும் மக்களையும் காப்பாற்று வதற்காகத் தொடர்ந்து போராட இந்த மேதினத்தில் சபதம் ஏற்போம்.

**தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக!**
**இடதுசாரிகளின் ஒற்றுமை ஓங்குக!**
**தொழிற்சங்க ஒற்றுமை ஓங்குக!**
**மே தினம் நீடூழி வாழ்க!**
**இன்குலாப் ஜிந்தாபாத்!**

(ஜி. சுகுமாறன்)
மாநில பொதுச் செயலாளர்
சிஐடியு

(டி.எம்.மூர்த்தி)
மாநில பொதுச் செயலாளர்
ஏஐடியுசி



# மே 8 விபிசி நினைவு தினம்

தமிழக தொழிலாளி வர்க்கம் விபிசி என அன்போடு பாசத்தோடு அழைத்த அருமைத் தலைவர் வி.பி.சிந்தன் அவர்கள் மறைந்து 35 ஆண்டுகள் ஆனாலும் இன்று வரை தொழிலாளி வர்க்கத்திற்கு அவர் ஆற்றிய சேவைகள் அரும்பணிகள் என்றென்றும் நினைவு கூறத்தக்க அளவில் உள்ளது.

சமூக மாற்றத்திற்காக தொழிலாளி வர்க்கத்தை தயார் படுத்துவதே விபிசிக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

# தொழிலாளர்களின் உரிமையை பறிக்கும் வாரிய ஆணை 2-ஐ ரத்து செய்திட மாநிலந்தழுவிய ஆர்ப்பாட்டம்!


தமிழக அரசின் நிதிநிலையை காரணம் காட்டி வாரிய ஆணை எண் 2 நாள் 12.04.2022-ன் மூலம் மின்வாரியம் 23 வழிகளில் நடைமுறையில் பெற்றுவந்த உரிமைகளை பறித்துள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் 01.07.1957-ல் உருவாவதற்கு முன்பு தமிழக அரசின் பொதுப்பணித்துறையில் கட்டுப்பாட்டுக்கு வந்தது. 01.07.1957 மெட்ராஸ் ஸ்டேட் எலக்ட்ரிசிட்டி போர்டு என மாற்றம் செய்யப்படுகின்ற பொழுது அரசு ஆணை Go.Ms. No. 538 PWED நாள் 25.02.1958 மூலம் இடைநிலை விதி முறைகளை உருவாக்கி ஊழியர்களின் வாழ்விற்கு வழிவகுத்தது.

மின் உற்பத்தி திட்டங்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்ய வேண்டி இருந்ததால் தமிழக மின் வாரியத்தை தன்னாட்சி நிறுவனமாக (Qashi Government) அறிவித்தது. அதன் அடிப்படையில் தான் தமிழ்நாடு மின்சார வாரியம் 01.11.2010 முதல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் மற்றும் மின்தொடரமைப்பு கழகம் என கம்பெனியாக மாறினாலும் ஊழியர்களின் நலன் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் அனைத்தும் முந்தைய தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கடைபிடித்தையே கடைபிடித்து வருகிறோம்.

இந்த சூழ்நிலையில் தான் வாரிய நிர்வாகம் ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு ஒப்பந்தங்களை கணக்கில் கொள்ளாமல் இது போன்ற தொழிலாளர் விரோத உத்திரவுகளை பிறப்பித்து வருவதை பணியாளர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை வாரியம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வாகன எரிபொருளை குறைப்பது, புதிய பதவிகளை உருவாக்காமல் இருப்பது, பஞ்சப்படியை அரசிடம் அனுமதி பெற்று வழங்குவது. பயணப்பட்டியலை குறைப்பது.




மின்வாரிய பணியாளர் களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை பறிக்கின்ற வகையில் நடத்துவது. புதிய வாகனங் கள் வாங்க மறுப்பது. வீட்டுக் கடன், கல்விக்கடன். வாகனக் கடன், கணினிக் கடன் போன்றவை வழங்கப் படமாட்டாது என்று வாரிய உத்தரவை வெளியிட்டது. இந்த உத்தரவை திரும்பபெற வலியுறுத்தியும், ஊதிய உயர்வு 01.12.2019 முதல் வழங்கிடக்கோரியும்,




ரீடிப்ளாய்மென்ட் முறையை கைவிடக் கோரியும், விநியோகப் பிரிவு, வட்டம்/ மண்டலம் ஆகியவற்றில் புதிய பிரிவு அலுவலங்களை உருவாக்குகின்ற பொழுது தொழிற்சங்கங்களை அழைத்து பேச வேண்டுமென வலியுறுத்தி 25.04.2022 அன்று மாநிலந்தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை, கடலூர், கோவை, உள்ளிட்ட இடங்களில் தொழிலாளர்களும், பொறியாளர்களும், பெருவாரியான எண்ணிக்கையில் கலந்து கொண்டார்கள். அனைத்து இடங்களிலும் தொழிலாளர்களும், பொறியாளர்களும் பங்கேற்பு இருந்தது.

நடைமுறையில் உள்ள ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் பஞ்சப்படியை எவ்வாறு வழங்க வேண்டுமென கடந்த 22.02.2018-ல் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தஒப்பந்த அடிப் படையில் ஊழியர்கள் நலன் பாதுகாக்கப் படாமல் வாரியம் தன்னிச் சையான உத்திர வை வெளியிட்டு வருவது தொழில் அமைதியை சீர்குலைக் கின்ற செயலாகும்.

வாரியத்தின் இந்த நடவடிக்கையை கண்டித்து மின்வாரிய தலைமையகம் முன்பு 25.04.2022 அன்று தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பொறியாளர் கழக பொதுச்செயலாளர் திருமதி ஜெயந்தி தலைமை தாங்கினார். மேலும் திரு.தனசே கரன் (சம்மேளனம்), திரு.சந்திர சேகரன் (AESU), திரு. விஜயரங்கன் (ADMK). திரு. செல்வராஜ்( JANATHA), திரு. சேவியர்( INTUC), திரு.சம்பத்குமார் (பொறி யாளர் சங்கம்), திரு.லெனின் (கணக்கு அலுவலர் சங்கம்), திரு. அம்பிநாதன் (கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்) திரு. சாமி (அம்பேத்கர் எம்ப்ளாய்ஸ் யூனியன்), திரு. பொன்னம் பலவாணன் (இன்ஜினியர்ஸ் யூனியன்) வாழ்த்தி பேசினார்கள். நிறைவாக மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் நிறைஉரை ஆற்றினார். இந்த ஆர்ப்பாட்ட நிகழ்வில் 1300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தமிழகம் முழுவதும் அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு சிறப்பாக நடைபெற்ற முக்கிய மான போராட்டம், மின்வாரிய பணியாளர்களின் நிலையை உணர்ந்து கொண்டு தமிழக அரசும், மின்வாரிய நிர்வாகமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்து கிறோம்.



# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சென்னை

நாள்: 19.04.2022

பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா, வணக்கம்

| | | |
|---|---|---|
| பொருள் | : | வாரிய ஆணை எண் (Per) FB TANGEDCO Proceedings No.2, Dated 12th April 2022 ரத்து செய்ய கோருவது - தொடர்பாக |
| பார்வை | : | 1. GO MS No. 248 FINANCE(MPC) Department dt 20.05.2020<br>2. (Per)F.B. TANGEDCO Proceedings No.21 Dated 23.07.2020 |

வாரிய ஆணை எண் 2, நாள் 12.04.2022, மின்வாரியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் நலன்களுக்கு எதிராகவும் முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிராகவும் இருப்பதால் இந்த வாரிய உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என முதலில் தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

பார்வை ஒன்றில் கண்ட அரசாணை வாயிலாக கொரானா நோய் தொற்று காலத்தில் நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு அரசின் துறைகளில்/ நிறுவனங்களில் புதிய பதவிகளை உருவாக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து வாரிய ஆணை 21 நாள் 23.07.2020-ன் மூலம் மின்வாரியத்திலும் வேலை பளு ஒப்பந்தத்தின் மூலம் வராத இடங்களுக்கு இந்த உத்தரவை அமல்படுத்தியது வாரிய நிர்வாகம். தற்போது வழங்கப்பட்ட வாரிய ஆணை எண் 2 நாள் 12.04.2022 மூலமாக நிதிச்சுமையை காரணம் காட்டி 23 வழிகளில் நடைமுறையில் பெற்று வந்த உரிமைகளை வாரிய நிர்வாகம் இந்த உத்தரவின் மூலம் பறித்துள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழ்நாடு மின்சார வாரியம் 01.07.1957-ல் உருவாக்குவதற்கு முன்பு தமிழக அரசின் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. 01.07.1957-ல் மெட்ராஸ் ஸ்டேட் எலக்ட்ரிசிட்டி போர்டு என மாற்றம் செய்யப்படுகின்ற பொழுது அரசுஆணை G.O.MS. No. 538 PWED dated 25.02.1958 மற்றும் B.P No. 445 நாள் 26.04.1958 மூலம் இடைநிலை விதிமுறைகள் (TRANSITORY REGULATIONS) உருவாக்கி ஊழியர்களின் நல்வாழ்விற்கு வழிவகுத்தது.

அதன்படி ...

**TRANSITORY REGULATIONS**

1. The Said staff shall continue to be governed by the same service rules and regulation as were applicated to them under the Govt. of Madras prior to the 1st July 1957 until corresponding service rules and regulations are framed by the Board under sub-Section (c) section 79 of the Electricity (Supply) Act 1948 (Central Act LIV of 1948.

2. The Said staff who were in Govt. Service till 30.06.1957 and who have opted to serve under the Board from 1.7.57, shall continue to enjoy the service conditions under the Govt. Whenever any change therefor is given effect to be the Board.

3. All orders passed by the Government of Madras in relation to the said staff, on and after the 1st July 1957 shall be deemed to be lawful orders passed by the Board and shall have effect accordingly.

என குறிப்பிட்டுள்ளதை தற்போது உள்ள மின்வாரிய அலுவலர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என கருதுகின்றோம்.

அதே போல கடந்த 01.12.1996 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பான முத்தரப்பு ஒப்பந்தம் 08.07.1998 அன்று ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் DEARNESS ALLOWANCE என்ற தலைப்பின் கீழ்

The Dearness Allowance Rates will be revised twice in a year On 1st January and 1st July Taking into account the Variations in the Perivious twelve Months Avearage All India consumer Price Index Numbers adopting the same formulaas followed by the State Government.

மேலும் பணி ஓய்வுபெற்றவர்களுக்கு...

The Revised Pension scheme of the Government of Tamilnadu and any amendment there on from time to time will be applied to the Pensioners of the TNEB என குறிப்பிட்டுள்ளதையும் தற்போது உள்ள வாரிய நிர்வாக அலுவலர்களால் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதே போல மின்வாரிய மறுசீரமைப்பு தொடர்பாக G.O.MS. No. 100 dated 19.10.2010 உத்தரவை எதிர்த்து ஒரு சங்கம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த பொழுது அந்த வழக்கில் மின்வாரிய நிர்வாகத்தால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணபத்திரத்தில் தற்போது உள்ள பணி நிலைகளிலும் , பணி விதிகளிலும் தற்போது உள்ள நிலையே தொடரும் என்றும், பணியாளர்களின் பதவி உயர்வு, புதிய பணி நியமனம், உள்முக தேர்வு, விருப்ப மாறுதல், விடுப்புகள், அனைத்து அலவனஸ்கள் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், ஓய்வு/ இறப்பு பணப்பயன்கள் அதாவது கிராஜிவிட்டி, சரண் விடுப்பு,பொது வருங்கால வைப்பு நிதி, காலமுறை பஞ்சப்படி உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஆனால் மேற்கண்ட விவரங்களை கணக்கில் கொள்ளாமல் வாரிய உத்தரவு எண் 2, நாள் 12.04.2022, வெளியிடப்பட்டிருப்பது இயற்கை நீதிக்கு எதிரானதாகும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மின்வாரியத்தின் நிதி இழப்பிற்கு பணியாளர்கள் எந்த வகையிலும் காரணம் அல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். கடந்த 2020-21-ம் ஆண்டில் மின்வாரியத்தின் மொத்த வருமானம் ரூ.63,388.52 கோடி செலவினமாக ரூ.76,795.84 கோடி, அதாவது வருவாய்க்கும் செலவிற்கும் வித்தியாசம் ரூ.13,407.37 கோடியாக இழப்பாக அமைந்துள்ளது. இதில் ஊழியர்கள் நலன் ஓய்வூதியம் உட்பட செலவு செய்த தொகையாக ரூ. 9144.15 கோடி என குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த வருவாயில் 14.42 சதவீதம் மட்டுமே ஆனால் மொத்த வருவாயில் 75.7 சதவீதத்திற்கு அதாவது ரூ.47,987.89 கோடிக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்ததன் விளைவு வாரியம் மிகப்பெரிய நிதி இழப்பிற்கு உள்ளாகி உள்ளது.

எனவே தான் நமது மின் உற்பத்தியை முழுவீச்சில் உற்பத்தி செய்தாலே இந்த செலவை சரிகட்ட முடியும். தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி, தொழிற்சங்கங்கள் தரும் ஆலோசனையை கணக்கில் கொண்டாலே நிதி ஒழுகலை தடுக்க முடியும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து தற்போது வெளியிடப்பட்ட வாரிய ஆணை எண் 2 நாள் 12.04.2022-ஐ ரத்து செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

**தங்கள் உண்மையுள்ள**



SECRETARIAT BRANCH
N.P.K.R.R. MAALIGAI,
144, ANNA SALAI
CHENNAI-2.

Establishment – TANGEDCO – State Public Sector Undertakings/Statutory Boards – Ban on creation of posts in all the State Public Sector Undertakings/Statutory Boards – Adoption of Government orders in TANGEDCO - Orders – Issued.

SECRETARIAT BRANCH

(Per.) FB TANGEDCO Proceedings No.2

Dated 12th April 2022.
Panguni-29.
Thiruvalluvar Aandu 2053.

Read :-

1. G.O. Ms. No.248 Finance (MPC) Department dated 20.05.2020.
2. (Per.) FB TANGEDCO Proceedings No.21 SB dated 23.07.2020.
3. Government Letter No.3157/Finance (BPE)/ 2022, dated 26.01.2022.
4. Extract from the minutes of 106th Board meeting of TANGEDCO held on 19.03.2022.

*****

**PROCEEDINGS:-**

In the Government Letter third read above, the Government had reiterated the guidelines issued in G.O. Ms. No.27 Finance (BPE) Department dated 21.01.2002 and sent the communication consisting of the following points :-

i. To ensure that no new posts are created at any levels without prior approval of Government.

ii. To forward necessary proposals to Government in case of emergency, the need for creation of new posts, sending necessary proposal duly surrendering some other posts commensurate with the new creation of post along with copy of Government order in which the surrendering post was originally sanctioned/created.

2. Based on the above directions of the Government, necessary proposal has been placed before the 106th Board meeting of TANGEDCO held on 19.03.2022 for adoption of the above Government Letter.

3. After careful consideration, the Board of TANGEDCO has approved for adoption of Government Letter in TANGEDCO. Accordingly, it is hereby ordered that the following guidelines issued in G.O. Ms. No.27 Finance (BPE) Department dated 21.01.2002 should be followed scrupulously along with the instructions issued in the Government Letter third read above :-

**Guidelines issued in the Government Order:-**

i. Cost of fuel consumed in excess of the operational ceiling fixed shall be recovered from the vehicle using officers concerned from the pay for the subsequent month. The existing orders on economy in expenditure of Motor Vehicles shall be strictly followed.

ii. The Government orders on ban on creation and filling up of posts in respect of Government Departments as amended from time to time shall mutatis mutandis apply to State Public Sector Undertakings also.

iii. Any welfare scheme implemented for Government employees should not be extended to the employees of loss making Undertakings. However such welfare schemes may be extended to the other State Public Sector Undertakings based on their profitability after obtaining prior concurrence of Government.

iv. DA enhancement in loss making Public Sector Undertakings should be referred to Government for approval before implementing.

v. Provisions made in the Budget of the State Public Sector Undertakings for contingencies and entertainment should be reduced to the minimum necessary and a saving of atleast 10% should be effected. There shall be a cut of 10% in the outlay provided under wages, travel expenses and office expenses.

vi. Economy in expenditure should be observed in holding conferences, seminars and meetings. Air travel should be restricted to those eligible strictly as per Government Orders and the relevant rules should not be relaxed.

vii. Effective control of expenditure under travel expenses should be ensured so that the total is restricted within 10% of the basic pay of all employees taken together. CEOs of all State Public Sector Undertakings may be specifically instructed to regulate tours and travels so that travel expenses are kept within the provisions made in the Budget.

viii. Authorisation for tours should be made rigorous. Transfer TA expenses should also be curtailed by judicious planning of transfers and by following Government orders in this regard.

ix. In respect of loss making State Public Sector Undertakings, sanction of funds from the corporation's own funds towards staff welfare schemes such as sanction of House Building Advance, Conveyance Advance, Education Advance, Computer Advance etc. may be discontinued. No budget provision for this should be made in the Budget of the loss making State Public Sector Undertakings.

x. For all staff advances made by the State Public Sector Undertakings interest on such loan should not be less than the marginal cost of borrowed capital or average cost of borrowed capital whichever is higher.

xi. The State Public Sector Undertakings should reduce the financing costs, by substituting the high cost of borrowings with the low cost loans by obtaining fresh loans since the interest rate in the finance market is constantly coming down.

xii. The expenditure on Telephones and Telex (including FAX), Internet should be minimized. It is necessary to exercise strict control on the use of STD facilities, particularly at residences, which may be restricted to a few important telephones i.e. important officers only under orders of the Board of Directors. STD will be covered within the overall ceiling limit as per existing Government Orders. Excess telephone calls on the residential telephones of the officers should be recovered and in no case proposal for waiver will be entertained.

xiii. There should be an absolute ban on the purchase of new items of decorative furniture etc. except where they are considered absolutely essential for functional improvement.

xiv. A detailed examination may be carried out in respect of various schemes and activities for which provision has been made in the Capital Budget, in order to assess the extent to which these can be re-scheduled or postponed without adversely affecting the functioning of the State Public Sector Undertakings.

xv. The practice of State Public Sector Undertakings hosting lunches and dinners without there being any necessity in the course of their business should be avoided.

xvi. Strict economy in expenditure should be observed in preparing the copies of Annual Accounts of the State Public Sector Undertakings.

xvii. Persons should not be sponsored for any training programmes in loss making PSUs if the cost of training excess Rs.10,000/-. Training can be considered only in areas which are functionally essential for the State Public Sector Undertakings.

xviii. Directors or Officers of State Public Sector Undertakings should not henceforth stay at any Five Star Hotel at the cost of the State Public Sector Undertakings irrespective of past practice or their own rules or decision in this regard.

xix. The capital expenditure on maintenance of assets may be undertaken under Zero Based Budgeting technique.

xx. Purchase of new assets i.e. vehicle etc. which are not going to augment revenue to the corporation or which may result in additional revenue recurring expenditure should be banned.

xxi. Strict scrutiny of new expenditure on machinery and equipments is necessary as most equipments are now available in private sector for hire at reasonable costs. New office equipments should be bought with care based on specific sanction from the Board. Utilization of existing equipments will have to be maximized.

xxii. The State Public Sector Undertakings should ensure that by and large the resources raised on loans and share capital are utilized in investments which are productive, and yielding appropriate financial returns.

xxiii. As per the existing instructions ex-officio office bearers like Chairman/MD/CMD/Directors and other officials of State Public Sector Undertakings/Boards/Co-operative Institutions under the control of various Departments are not eligible for personal staff and other perquisite like Motor Vehicle, residential telephones, refrigerators, service of cookes etc. at the cost of these undertaking since the officers are availing such facilities as per their regular positions in Government. CEOs of State Public Sector Undertakings are asked to follow the above instructions strictly.

**Instructions Issued in Government Letter dated 26.01.2022 :-**

i. No new posts be created at any levels in TANGEDCO without prior approval of the Government.

ii. In case of emergency the need for creation of new posts, necessary proposals be forwarded to Government duly surrendering some other posts commensurate with the new creation of post along with copy of G.O. in which the surrendering post was originally sanctioned/created.

**(BY ORDER OF THE BOARD)**

**A.MANIKKANNAN**
**SECRETARY**



# மகத்தான தலைவர் தோழர் பி.சி. வேலாயுதம்! நினைவு நாள் 05.05.2022

மின்வாரியத்தில் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்த அடித்தளம் இட்டவர். தொழிற் சங்க தலைவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்தவர் தனது பணி ஓய்வு பாராட்டு விழாவில் தனக்கு அளித்த வெகுமதியை தொழிற் சங்கத்திற்கும், மார்க்சிஸ்ட் கட்சிக்கும் அளித்தவர்



# தமிழகத்தில் மின் வெட்டுக்கு யார் காரணம்!

தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்களில் சில மணி நேரம் மின்வெட்டு ஏற்பட்டது மின்சாரத்தை பயன்படுத்திய மக்கள் மின்சாரம் தடைபட்ட காரணத்தால் பிரிவு அலுவலகத்தை சேதப்படுத்தியும் மின்வாரிய பணியாளர்களை அத்துமீறி அலுவலகத்துக்குள் நுழைந்து தாக்கியது உள்ளிட்ட சம்பவங்கள் அரங்கேறியுள்ளது.

அனைத்து தொழிலுக்கும் தாய் தொழிலான மின்சாரம் இல்லை என்றால் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவார்கள் என்பது நிஜம் அதுவும் களைத்துப் போய் வீட்டிற்கு வந்து இரவு நிம்மதியாக உறங்க முடியவில்லை என்றால் ஆத்திரம் இவைகள் அனைத்தும் நியாயம்தான், ஆனால் மின்சாரத்தை நிறுத்தியது மின்சார வாரிய ஊழியர்கள் அல்ல என்பதை பொதுமக்கள் உணராமல் இருப்பதுதான் ஆச்சரியம் அளிக்கிறது.

ஒன்றிய அரசின் நிலக்கரி ஒதுக்கீட்டில் ஏற்பட்ட கோளாறு நிலக்கரி உறுதியாக மாநிலங்களுக்கு வருகின்ற ஏற்பாட்டைச் செய்ய தவறிய ஒன்றிய அரசின் தவறு. கண்காணிக்க மறந்த வாரிய நிர்வாகத்தின் தவறு ரயில்பெட்டி களுக்கான தொகையை உரிய நேரத்தில் செலுத்தாத தவறு இந்த தவறுகளை எல்லாம் தமிழக அரசினுடைய மின்வாரியம் செய்து , அப்பாவி ஊழியர்களை பொதுமக்கள் தாக்குகின்ற நடவடிக்கையை உருவாக்கியது வெட்கக்கேடு.

மத்திய தொகுப்பிலிருந்து நம்க்கு வழங்க வேண்டிய மின்சாரம் வழங்காமல் இருப்பதற்கு மத்திய அரசினுடைய மின் உற்பத்தி நிலையங்களில் நிலக்கரி பற்றாக்குறையால் ஏற்பட்டது என மத்திய அரசு கூறுகிறது.

மாநில அரசு தன்னுடைய சுய உற்பத்திக்கு தேவையான நிலக்கரியை முழுமையாக கொள்முதல் செய்ய இயலாததின் விளைவு. மாநில மின் வாரியத்தின் அனல் மின் நிலையங்களை முழுமையாக இயக்க முடியாமல் போனது இவைகளெல்லாம் தான் காரணம் ஆனால் பிரச்சினை என்று வருகின்ற பொழுது மத்திய அரசு மாநில அரசு என மாறிமாறி குற்றம்சாட்டி அப்பாவி பொதுமக்களை மின்வாரிய ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்த திசை திருப்புகின்ற ஏற்பாடு. அது எந்த விதத்திலும் பொருத்தமானது அல்ல என்பதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

மத்திய அரசின் கோல் இந்தியா நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலக்கரியை முழுமையாக அனுப்பாமல் தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கு நிலக்கரியை அனுப்புவதும் மாநில அரசினுடைய உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியை அனுப்புவதில் தேவையற்ற காலதாமதத்தை உருவாக்குவதும் இந்த நிகழ்வுக்கான காரணம்.

தாராளமய தனியார்மய கொள்கைகளால் நிலக்கரி சுரங்கங்கள் இன்று தனியாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன 44 நிலக்கரிச்சுரங்கங்களை தனியாருக்கு ஒதுக்க தேசத்தின் பிரதமர் நேரடி நிகழ்ச்சிக்கு செல்ல இருந்தது நாடறியும்.

முன்பெல்லாம் பொதுத்துறை நிலக்கரி சுரங்கங்களில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரி மத்திய மாநில அரசுகளின் மின் நிலையங்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது .ஆனால் பிஜேபி அரசு

ஆட்சிக்கு வந்த பின்பு யார் வேண்டுமானாலும் நிலக்கரியை எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை உருவாக்கி விலை கட்டுப்பாடும் ஒழிக்கப்பட்டது.

அதானி போன்ற இந்தியப் பெருமுதலாளிகள் என்ன விலையை தீர்மானிக்கிறார்கள் அந்த விலையை அனல் மின் நிலையங்கள் அதாவது மாநில அரசுக்குச் சொந்தமான மின் வாரியங்கள் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன.

தமிழகத்திற்கு ஒரு நாளைக்கு 72,000 டன் நிலக்கரி தேவைப்படுகிறது ஆனால் கடந்த பல ஆண்டுகளாக ஒன்றிய பிஜேபி அரசு சுமார் 40 முதல் 50 டன் வரை நிலக்கரியை அனுப்பி வருகிறது இந்தப் பற்றாக்குறையை சமாளிக்க தமிழக அரசும் வாரியம் முன்னெச்சரிக்கையாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான் வேதனை அளிக்கிறது.

தமிழக மின்வாரியம் சொல்லுகின்ற காரணம் தனியார் பெரு முதலாளிகள் ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ 4.50 பைசாவிற்கு விற்பனை செய்கின்ற பொழுது நமது மின் உற்பத்தி நிலையங்கள் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு தோராயமாக ரூ 6.93 பைசா ஆகிறது என்ற சொத்தை காரணத்தை காட்டி நிலக்கரி பற்றாக் குறையைப் போக்குவதற்காக நடவடிக்கை எடுக்காமல் தனியாரை நம்பி வாழுகின்ற ஏற்பாட்டை செய்து வருகிறார்கள் .

தனியார் இடத்தில் மின்சாரத்தை கொள்முதல் செய்கின்ற பொழுது நிச்சயமாக சில சம்பந்தப்பட்ட நபர்கள் பயன் அடைவார்கள் .ஆனால் உற்பத்திக்கான செலவு அதிகரித்தாலும் கடந்த 25 ஆண்டுகளாக மின் உற்பத்தியை செய்த தமிழ்நாடு மின் வாரியத்திற்கு சொந்தமான அனல் உற்பத்தி நிலையங்கள் தங்களது ஆயுள் காலம் முடிவடைந்த பின்பு கூட போனஸாக தான் மின் உற்பத்தியை செய்து தருகிறது என்பதை ஆட்சியாளர்கள் உணர மறுக்கிறார்கள்.

மின் வாரியத்தில் ஏற்பட்ட நிதி இழப்புக்கு காரணம், மின்சார கொள்முதல் மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் வைப்பதை வாரிய நிர்வாகமும் தமிழக அரசும் ஏனோ ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

தனியாரிடமிருந்து மின்சாரத்தை வாங்கு கின்ற காரணத்தால் சில நேரங்களில் மின்சார வாரியத்திற்கு சொந்தமான அனல் மின் நிலையங்களின் உற்பத்தியை zero உற்பத்தி என்ற முறையில் , ஏற்பாடுகளை செய்து நிதி இழப்பை ஏற்படுத்தி வருகிறது.

மக்களின் கோபம் மின் ஊழியர்கள் மேல் வருவது நியாமல்ல. தாங்கள் வாக்களித்து அரசாங்கம் தங்களை ஏதோ ஒருவகையில் ஏமாற்றுகிறது என்பதை மக்கள் என்றைக்கு உணர்கிறார்களோ அன்றைக்குத் தான் நமக்கு விடியல் ஏற்படும்.

இந்த தேசத்தில் நாம் முன்னேற முடியும் என்ற உணர்வு மக்களுக்கு வரவேண்டும். கொரோனோ தொற்றுநோய் காலத்தில்கூட ஏறத்தாழ 200 க்கும் மேற்பட்ட மின்வாரிய ஊழியர்கள் தங்களின் உயிரை பொருட்படுத்தாமல் தடையில்லா மின்சாரத்தை வழங்கி மக்களை வீட்டில் இருக்கச் செய்து, அதே நேரத்தில் நோய் தொற்றுக்கு ஆளாகி மரணமடைந்தவர்கள் என்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மின் தடைக்கு சாதாரண அந்த குப்பன் என்ற மின்வாரிய ஊழியர் எந்த விதத்திலும் பொறுப்பல்ல என்பதை மக்கள் உணரவேண்டும் மின்வாரிய ஊழியர்கள் என்னதான் நியாயமாக பேசினாலும் மக்கள் திரும்பத் திரும்ப கோபம் வருகின்ற மாதிரி பேசுவதால் ஒரு கட்டத்தில் மின் வாரிய ஊழியனும் நிதானத்தை இழக்கிறான். நிதானத்தை இழப்பது தவறுதான். நாம் மக்கள் ஊழியர் என்ற எண்ணத்தில் பணியாற்ற வேண்டும்.

பேசுவது தவறாக இருந்தாலும் அந்த நிலையை சூழ்நிலையை மின்சாரவாரிய நிர்வாகம் தமிழக அரசு உருவாக்கி வருகிறது என்பதுதான் சரியான கருத்து.

பணியாற்றும் மின்வாரிய ஊழியர் களுக்கு ஒரு வித அச்சத்தை ஏற்படுத்தி வருவதை கான முடிகிறது. எனவே தான் மின் ஊழியர் மத்திய அமைப்பு தமிழக அரசிடமும் மின் வாரியத்திடமும் கேட்டுக் கொள்வதெல்லாம் இனி ஒரு மின்ஊழியர் மீது தாக்குதலை தயவுகூர்ந்து அனுமதிக்காதீர்கள்.

நாங்களும் தமிழக அரசின் திட்டங்களை கிராமங்கள் தோறும் கொண்டு செல்லும் ஒரு சாதாரண ஊழியர்கள் என்பதை தமிழக அரசு உணர வேண்டும் என்பதுதான் எங்களது பணிவான வேண்டுகோள்.



# நிலக்கரி தட்டுப்பாட்டால் தவிக்கும் தமிழகம்! இதற்கு தீர்வு என்ன?

இந்தியாவின் மின்சார உற்பத்தி என்பது 65 சதவீதம் அனல் மின் நிலையங்கள் மூலமாகவும், மீதமுள்ள 35 சதவீதம் என்பது அனல்,புனல்,காற்றாலை, சூரியசக்தி, புதுப் பிக்கத்தக்க வல்ல எரிசக்தி மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழக மின்சார வாரியத் தின் மின்சார தேவையும் 65சதவீதம் அனல் மின்சாரத்தின் மூலமாகவே பெறப்படுகிறது தமிழகத்தின் மின்சார தேவை என்பது 15500 மெகாவாட். இந்த தேவை என்பது ஏப்ரல், மாதத்தில் உயர்ந்து அதிகபட்ச மின்சார நுகர்வாக 17100 மெகாவாட் என்று உயர்ந்துள்ளது. இது மே மாதத்தில் மேலும் 250 மெகாவாட் கூடுதலாக வாய்ப்புள்ளது. தமிழக மக்களுக்கு தடையில்லாத மின்சாரத்தை பெறுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது. அதே நேரம் வாங்கப்படும் மின்சாரத்தின் விலையானது கட்டுபடியாகக் கூடிய விலையில் உள்ளதா என்ற கேள்வி எழுகிறது.

MOD ( Merit Order Despatch) ஒன்றிய பி.ஜே.பி. அரசு மின்சாரத்தை உற்பத்தி செய் வதற்கும், தனியாரிடம் இருந்து வாங்குவதற்கும் ஒருகொள்கையை வகுத்து அனைத்து மாநில மின்சார வாரியங்களுக்கும் அனுப்பி இதை அமலாக்கம் செய்து வருகிறது. MOD மூலம் குறைந்த விலையில் மின்சாரத்தை வாங்க வேண்டும் மற்றும் அதிக செலவில் உற்பத்தி யாகும் மின்சாரத்தை உற்பத்தி செய்யாமல் நிறுத்த வேண்டும். இதன் மூலம் நட்டத்தை தவிர்க்க முடியும் என்று ஒன்றிய அரசு கருதுகிறது.மேலும் MOD யின் மூலம் சூரிய ஒளி மின்சாரம் (Solar) நீர் மின்சாரம் (Hydro) மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை முதலில் வாங்க வேண்டும். அதன் பிறகே அனல் மின்சாரத்தை வாங்க வேண்டும் என்று ஒன்றிய அரசு MOD மூலம் விதிவகுத்துள்ளது. இந்த நிலையில் தான் தமிழக அரசு மின்சார தட்டுப்பாட்டை இந்த கோடை காலத்தில் சந்தித்து வருகிறது. இதற்கு பலர் பல்வேறு காரணங்களை சொல்லி வருகின்றனர்.

சமீபத்தில் தமிழக மின்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி அவர்கள் 750 மெகாவாட் மின்சாரம் மத்திய தொகுப்பில் இருந்து நமக்கு கிடைக்கவில்லை என்று ( Central Grid) தெரிவித்தார். மின் தடைக்கு இது ஒரு காரணம் என்றும் தெரிவித்தார். ஒன்றிய தொகுப்பி லிருந்து நமக்கு 6166 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைக்க வேண்டும். இதில் 750 மெகாவாட் கிடைக்கவில்லை என்று மின்துறை அமைச்சர் தெரிவித்தது சரியான காரணம் தான். மத்திய தொகுப்பிலிருந்து மின்சாரம் கிடைக் காமல் இருந்ததற்கு நிலக்கரியே காரணம் என்று பல்வேறு செய்தி குறிப்புகள் நமக்கு தெரிவிக்கிறது. அனல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு தேவையான நிலக்கரியை Coal India நிறுவனமே வழங்க வேண்டும். கோல் இந்தியா நிறுவனம் ஒவ்வொரு அனல் மின் நிலையத்திற்கும் தேவையான நிலக்கரியை சுரங்கத்தில் வெட்டி எடுத்து அவ்வப்போது வழங்க வேண்டியது கோல் இந்தியா நிறுவனத்தின் கடமையாகும். கடந்த பல ஆண்டுகளாக ஒன்றிய,மாநில பொதுத்துறை நிறுவனங்களுக்கு அப்படித்தான் வழங்கப்பட்டு

வந்தது. இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக நிலக்கரியை வெட்டி எடுப்பதில் உள்ள இடை வெளியின் காரணமாக மின்சாரம் உற்பத்தி செய் வதற்கு நிலக்கரி பற்றாக் குறையாக மாறி உள்ளது. இதனால் மத்திய தொகுப்பில் இருந்து மின்சாரத்தை அளிக்க முடியவில்லை என்று ஒன்றிய அரசு நிறுவனமான NTPC தெரிவிக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச், ஏப்ரல், மே மாத கோடை காலங்களில் மின்சார நுகர்வு 1000 முதல் 1500 மெகாவாட் வரை உயரும். அதை சமாளிப்பதற்கு மத்திய தொகுப்பு ( Central Grid ) அல்லது தனியார் மின் உற்பத்தியாளரிடம் மின்சாரத்தை வாங்கி கோடை காலத்தை சமாளிக்கும் வழக்கமான நடைமுறையிலிருந்து மாறி தமிழக மின்சார வாரியம் தன்சுயசார்பு மின்சாரத்தை அதாவது தமிழக அனல் மின் நிலையங்களின் 4320 மெகாவாட்டில் 90சதவீதத்திற்கு மேல் உற்த்தி செய்வதும், சூரியசக்தி மின்சாரத்தை 4316 மெகாவாட் நிறுவுத்திறனிலிருந்து இருமடங்கு உயர்த்து வதன் மூலம் குறைந்த விலையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதுடன் மின்சார வாரியத்தின் நட்டத்தை தவிர்த்து இலாபத்தில் இயங்கு வதற்கு வகை செய்யும்.

புவி வெப்பமயமாக்கல், காற்றுமாசு படுதல், தண்ணீர் மாசுபடுதல் போன்றவைகளை தவிர்க்கும் பொருட்டு அனல் மின் நிலைய மின்சார உற்பத்தியிலிருந்து படிப்படியாக மாசு இல்லாத மின்சார உற்பத்திக்கு மாற வேண்டிய கட்டாய சூழ்நிலையில் நாம் உள்ளோம். குறிப்பாக பசுமை மின்சாரத்தை (Green Power Technology) நோக்கி நாம் பயணப்பட வேண்டியது அவசியமாகும். அதில் ஒன்று தான் சூரிய சக்தி மின்சாரம். சோலார் பேனல்கள் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் Solar Power Technology அரசு பயன்படுத்தாமல் உள்ள நிலங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை பயன்படுத்தி சோலார் பேனல் அமைப்பதன் மூலம் மின்சார உற்பத்தியை பெருக்கலாம். பராமரிப்பு செலவும் குறைவு. ஒரேஒரு முறை முதலீடு செய்யும் இந்த திட்டத்தின் மூலம் மின்சார உற்பத்திக்கான செலவு ஒரு யூனிட்டிற்கு ரூ.2.60 முதல் ரூ. 3.00 வரைமட்டுமே செலவாகும். ஐரோப்பிய நாடுகள் இதில் முன்னிலை வகிக்கிறது.

மிதவை காற்றாலைகள் ( Flotting Wind Turbines) மிதவை காற்றாலைகள் என்பது கடற்கரை ஓரத்தில் மிதக்கும் காற்றாலைகள் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகும். இதன் மூலம் 24X7= 375 நாட்களும் தரமான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். தமிழகத்தின் நீண்ட கடற்பரப்புகளில் இதை நிறுவிடும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஒரு முறை முதலீடு செய்தால் 25 ஆண்டுகளுக்கு தரமான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று இதை பயன்படுத்தி வரும் நார்வே, டென்மார்க், இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் தெரிவிக்கின்றன. இத்திட்டத்தை ஜப்பான் நாடு 2020-ம் ஆண்டு ஜப்பானில் 20 கி.மீட்டர் பரப்பளவில்1 ஜிகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

கடலுக்கு அடியில் அலைகளை பயன்படுத்துவது மின்சாரத்தை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை ( Tidel Energy Technology) உலக நாடுகள் பயன்படுத்தி வருகின்றன. கடலுக்கு அடியில் Hydro Dynamic Wing பொருத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை சுவீடன் நாட்டின் ( Merin Energy Technology) என்ற நிறுவனம் 2013 ஆம் ஆண்டில் கண்டுபிடித்து மின் உற் பத்தியை துவங்கியது. இந்த தொழில் நுட்பம் தரம் வாய்ந்த மிகவும் நம்பகதகுந்த Tidel Power Generation என்று கூறப்படுகிறது. இதே போல 2015 ஆம் ஆண்டு 9.5 கி.மீ. தொலை விற்கு கடலுக்கு அடியில் டர்பையன் களை நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தை இங்கிலாந்து நாடு பயன் படுத்தி வருகின்றது.

இது போன்ற பசுமை மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் தான் பூமிப்பந்தை பாது காப்பதற்கும், காற்று, நீர், இயற்கை வளங்கள் மசு படாமல் காப்பதற்கும், பசுமை மின்சார உற்பத்தியே தீர்வாக அமையும். நிலக்கரியை தவிர்த்து அனுமின்சாரத்தையும் தவிர்த்து ஜப்பான், இத்தாலி, நார்வே, இங்கிலாந்து ,ஜெர்மன் போன்ற நாடுகள் 70 சதவீதத்திற்கு மேல் மாறிவிட்டன. தமிழகமும் இதே பாதையில் செல்வது தான் மாசு இல்லாத உலகை படைப்பதற்கும், மின்சார தேவையில் தன்னி றைவு அடைவற்கும் மின்சாரத்தை மக்கள் வாங்கும் விலையில் கொடுப்பதற்கும் ஒரே வழி, ஒரே தீர்வு, கிரீன் எனர்ஜி தொழில்நுட்பம் மட்டுமே. மாற்றி யோசிப்போம்... மாற்றத்தை ஏற்படுத்துவோம்...

**- தி.ஜெயசங்கர்**



# இந்திய மே தினத்திற்கு நூறாண்டு!
# முதல் கொடி ஏற்றிய சிங்காரவேலர் புகழ் வாழ்க!!

சிங்கார வேலர் என்றொரு மானுடன் சிங்காரச் சென்னையில் ஓங்காரக் குரலெடுத்து உரத்து முழங்கினான். ''மே தினம் வாழ்க ! உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' 100 ஆண்டுகளுக்கு முன்பு 1923ம் ஆண்டு மே முதல் நாள் உலக உழைப்பாளர் தினத்தில் செங்கொடி ஏற்றப்பட்டு கடல் அலைகளோடு போட்டி போட்டு இந்த முழக்கம் எழுந்தது. அன்று மே தின கொண்டாட்டத்திற்காக இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்தார் சிங்காரவேலர். ஒன்று, சென்னை உயர்நீதி மன்றத்திற்கு எதிரில் இருந்த கடலொரத்து மணற்பரப்பு, அன்று துறைமுகம், ரயில் போக்குவரத்து போன்றவை அந்த இடத்தில் இல்லை, இப்போது அந்த இடம் முழுவதும் துறைமுகமாகிவிட்டது, இங்கு தான் சிங்காரவேலர் கொடியேற்றி முழக்கமிட்டார், இரண்டாவது இடம், திருவல்லிக்கேணி கடற்கரை, அந்த இடத்தில் கிருஷ்ணசாமி சர்மா தலைமை தாங்கி செங்கொடியேற்றினார். அந்தக் கூட்டத்தில் மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் சுப்ரமணிய சிவா இடியென முழங்கினார். இவர் வ.உ.சியோடு இணைந்து வேலை நிறுத்தங்களை நடத்தியவர்.

சிங்காரவேலர் கொடியேற்றி உரையாற்றிய போது. ''இந்துஸ்தான் தொழிலாளர் விவசாயிகள் கட்சி'' என்ற அமைப்பை அறிவித்தார். மே தினத்தை விடுமுறையாக அறிவிக்க வேண்டும், வேலை நேரத்தை குறைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதே தீர்மானம் திருவல்லிக்கேணி கடற்கரை மே தினக் கூட்டத்திலும் படித்து நிறைவேற்றப்பட்டது. தொழிலாளர்களின் நலனையும், விவசாயிகளின் நலனையும் காப்பாற்ற தனிக்கட்சி அவசியம் என்ற தோலைநோக்குப் பார்வையை சிங்கார வேலரின் செயல் காட்டுகிறது. தொழிலாளர்களும் விவசாயிகளும் இணைந்துதான் சமூக மாற்றம் நிகழ்த்தப்படும் என்கிற மார்க்சிய வரையறையில் அவருக்கு இருந்த தெளிவையும் இது காட்டுகிறது.

1886க்குப் பிறகு மேதினம் உலகம் முழுவதும் படிப்படியாக அனைத்து நாடுகளின் கொண்டாட்டமாகியது. இந்தியாவில் முதன் முதலில் மேதினத்தைக் கொண்டாடிய. அறிமுகப்படுத்திய சிவப்பு மனிதன் சிங்காரவேலர். சிங்காரவேலர்

அலங்காரத் தலைவராக அல்லாமல் ஆக்ரோச தலைவராக செம்மாந்து நின்றார். களப்போராளியாக இறுதி மூச்சுவரை வாழ்ந்தார். பின்னி தொழிற்சாலை, சூளைமில், அலுமினிய தொழிற்சாலை, ரயில்வே தொழிலாளர், டிராம்வே தொழிலாளர், அச்சகத்தொழிலாளர், முறைசாராத் தொழிலாளர் என அத்தனைப் பிரிவு தொழிலாளர் பிரச்சனைகளிலும் போராட்டங்களிலும் அவர் தொழிலாளர்களோடு களத்தில் நின்றார், தடியடிகளும், துப்பாக்கிச் சூடும் நடந்த இடங்களில் இருந்து அவர் தொழிலாளர்களுக்கு ஊக்கம் கொடுத்து வழிகாட்டியுள்ளார்.

1918ல் முதலில் பதிவு செய்யப்பட்ட நவீன தொழிற் சங்கம் சென்னையில் தான் அமைக்கப்பட்டது. "மெட்ராஸ் லேபர் யூனியன்" என்று பெயர் சூட்டப்பட்ட அந்த தொழிற்சங்கம்தான் முதல் தொழிற் சங்கம். இந்தியாவின் இந்த அமைப்பில் பங்கெடுத்த அன்னிபெசன்ட், வாடியா, செல்வபதி செட்டியார், ராமனுஜலு நாயுடு, திரு.வி.க போன்ற தலைவர்களோடு சேர்ந்து பணியாற்றிய முன்னோடி அவர். இந்தியாவில் கான்பூர் நகரில் நடந்த முதல் கம்யூனிஸ்ட் மாநாட்டிற்கும் அவர்தான் தலைமை தாங்கினார். தொழிலாளர்களோடு எல்லாப் போராட்டங்களிலும் அவர் நிற்கிறார் என்பதால் அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. பிறகு மேல் முறையீட்டில் குறைக்கப்பட்டது. மகாகவி பாரதியார், மாபெரும் தேசப் போராட்ட வீரர், வ.உ.சி, திரு.வி.க போன்றவர்களுக்கு இவர் வழியாக கம்யூனிச சித்தாந்தமும் நூல்களும் சென்று சேர்ந்துள்ளன. அன்று வீடுகளில் இருந்த பெரிய நூலகங்களில் இவர் வீடு முதன்மையானது.

அவர் சிறையில் இருந்தபோது புரட்சியாளர்கள் மூலம் மார்க்சிய மூலவர்களின் நூல்களோடு அவருக்கு ஏற்பட்ட தொடர்பு அவரை முழு புரட்சிக் காரனாக உருமாற்றியது. அவர் சமூகம், பொருளாதாரம், சட்டம் ஆகியவற்றோடு அப்போதைய விஞ்ஞான நூல்களைப் பயின்றுள்ளார். எல்லா விதமான மூடப்பழக்கங் களுக்கும் எதிரான அவரது விவாத ஆற்றலை அது கூர்மைப்படுத்தியது. அவருக்கும் ஜீவாவிற்கும் பெரியாரோடு இருந்த தொடர்பு மிக நெருக்கமானது. பெரியார் தனது நாத்திக எண்ணத்திற்கு வலுசேர்க்கிற ஏராளமான தரவுகளை சிங்காரவேலரிடமிருந்து பெற்றிருக்கிறார். பெரியாரின் குடியரசு இதழில் சிங்காரவேலர் தொடர்ந்து எழுதிய விஞ்ஞானக் கட்டுரைகள் எண்ணி எண்ணி போற்றத்தக்கன. 100 ஆண்டுகளுக்கு முன்பு பாமரனுக்கு தெரிய வேண்டும், அவன் அறிவு விரிவு பெறவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட விஞ்ஞானக் கட்டுரைகளின் முன்னோடி அவர்தான். அவர் காலத்தில் எல்லாவற்றிலும் அவர் " முதலாமவர்" என்பதாகவே இருந்திருக்கிறார். பெரியாருடைய முற்போக்குக் கருத்துக்கள், ஜாதி எதிர்ப்பு, மூடப்பழக்க எதிர்ப்பு, பெண்ணடிமைத்தன எதிர்ப்பு, பிற்பட்டோர் ஒடுக்கப்பட்டோரின் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு போன்ற அனைத்திலும் இணைந்து நின்று பிரச்சாரம் மேற்கொண்டார். ஈரோட்டுப் பாதை என்று அறியப்படும் திட்டத்தின் வரைவாளர் சிங்காரவேலர்தான். எனினும் தேசவிடுதலை பொருளாதார விடுதலை போன்றவற்றில் பெரியாரோடு அவர் மாறுபட்டார்.

அன்றைய சென்னை ராஜதானியில் உருவான சமூக பொருளாதார, கருத்தோட்டங் களிலும் எண்ணப் போக்குகளிலும் சிங்காரவேலரின் முத்திரை நீக்கமற நிறைந்திருந்தது. இடதுசாரி நிலையிலிருந்து, தொழிலாளி, விவசாயி, ஏழை எளியோர் முன்னேற்றத்திற்காக மார்க்சிய சித்தாந்த தெளிவோடு, சிதைக்க முடியாத நெஞ்சுரத்தோடு செயல்பட்டவர்தான் சிங்காரவேலர். மே தினத்தின் முதல் கொடியை ஏற்றும் போது அவருக்கு வயது 63. கம்யூனிஸ்ட் இயக்கம் அமைப்பாக முளைவிடத் தொடங்கியதும் அப்போதுதான். கான்பூரில் நடந்த கம்யூனிஸ்டு கட்சியின் முதல் மாநாட்டின் முதல் தலைவரும் சிங்கார வேலர்தான். கான்பூர் செல்வதற்கு தடைவந்தால் மாட்டு வண்டி கட்டிக்கொண்டாவது கான்பூர் செல்வேன் என்று கூறிய கொள்கைக் குன்று அவர். அந்த முதியவயதில் அவரை கான்பூர் சதி வழக்கில் இணைத்து பிரிட்டிஷ் அரசு கைது செய்து கொடுமை புரிந்தது. இந்த வழக்கு அவரை உலகம் முழுவதும் அறிந்த கம்யூனிஸ்ட் ஆக்கியது. இந்தியாவில் தொழிலாளர் நிலை பற்றி

லண்டனிலிருந்த கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விபரங்கள் தந்து பிரிட்டிஷ் நாடாளுமன்ற வாதத்திற்கு துணை சேர்த்தவர் அவர். ஷக்லத்வாலா போன்ற பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியத் தொழிலாளர்களுக்கு பிரிட்டனில் உள்ள தொழிற்சங்க உரிமையும், சட்டங்களும் வேண்டும் என்று பேசினார்கள். 1926ம் ஆண்டு வந்த இந்திய தொழிற் சங்க சட்டத்திற்கு இங்கு நடந்த எண்ணற்ற போராட்டங் களுக்கும், பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட்டு களின் முயற்சிக்கும், சிங்கார வேலருக்கு பெரும் பங்குண்டு. சிங்காரவேலரின் உலகப் பார்வை வியந்து போற்றத் தக்கது.



அவரும் கலந்து நடந்த அனைத்து தொழிலாளர் போராட்டங்களும் ஒடுக்கப்பட்டன. துப்பாக்கிச் சூடுகள், தடியடிகள், கொத்துக் கொத்தாக வேலை நீக்கங்கள், ஜாதி, மதப்பிரிவினைகளை முதலாளிகள் பயன்படுத்துதால் போன்ற வற்றிற்குமத்தியிலும் அவர் தளராது நம்பிக்கையோடு தொழிலாளர்களுக்கு துணிவை ஊட்டினார். போராட்டங்களின் தோல்வி குறித்து பேசிவிட்டு தொழிலாளர்கள், விவசாயிகள் இன்னும் வலிமையோடு ஒற்றுமையாக போராடினால் வெற்றி பெற முடியும் என்று தொடர்ந்து வலியுறுத்தினார், அங்குதான் அவர் வேறு பல தலைவர்களிடமிருந்து வேறுபட்டு ஒளிர்ந்தார். உலகத் தொழிலாளர்களோடு இந்தியத் தொழிலாளியை இணைத்து ஒருமைப்படுத்தும் வெளிப்பாடாக சிங்காரவேலர் ஏற்றிய முதல் மேதினக் கொடியின் செய்தி உலகத்தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்பதுதான். எந்த ஜாதி, மத, தேச, இன, மொழி, நிற வேறு பாடுகளுக்கும் தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட ஒற்றுமையில் இடமில்லை என்ற செய்திதான் அது.

இன்று உலகமயம் என்று கூறி மூலதனம் மேற்கண்ட எல்லாவற்றையும் தாண்டி பாய்கிறது. மூலதனத்திற்கும் சுரண்டலுக்கும் தேச வேறுபாடுகள் இல்லை. வேறு எந்த வேறுபாடுகளும் இல்லை. தொழிலாளர் இயக்கம் உலக மயமாக வேண்டும் என்ற முழக்கத்தை 1848ம் ஆண்டிலேயே தனது கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்சும் ஏங்கெல்சும் முழங்கினார்கள். வேலை நேரக் குறைப்பு போன்ற எந்தனையோ வெற்றிகளை தொழிலாளர்கள் பெற்றிருக்கிறார்கள். எனினும் மூலதனத்தின், கார்ப்பரேட்டுகளின், அவர்களுக்காக நிற்கிற அரசுகளின் சுரண்டல் முயற்சியும், அடக்குமுறை முயற்சிகளும் ஒரு புறம் தீவிரப்பட்டே வருகிறது. 8 மணி நேர வேலை கூட இல்லாத நிறுவனங்கள் ஏராளம்.

இவற்றை எதிர்த்துப் போராட்டங்களும் நடந்த வண்ணமுள்ளன. இந்த வர்க்கப் போராட்டம் சோசலிசம் மலரும் வரை ஓயாது. சோசலிசம் தானாக வந்து விடாது. தொழிலாளிகள் விவசாயிகளை அச்சாணியாகக் கொண்ட அரசியல் இயக்கம் அதை புரட்சியின் மூலம் வென்றெடுத்தாக வேண்டும். சிங்காரவேலர் என்றொரு மானுடன் தென்னிந்தியாவில் முதன் முதலில் சோசலிசக் கருத்தை விதைத்து அதற்காக உழைத்தார். முதல் அரசியல் கட்சியை தோற்றுவித்தார். முதல் மே தினக் கொடியை ஏற்றி உலகப் பார்வையை உழைப்பாளிக்குப் போதித்தார். அதற்கான நூற்றாண்டில் அவர் புகழ் போற்றுவோம்! அவர் வழி நடந்து சோசலிசத்தை அரியணையில் ஏற்றுவோம்!!

**-அ. சவுந்திரராசன்**



# தோழர் பிருந்தா காரத் அநீதிக்கெதிரான போர்க்குரல்!

உத்தப்புரம் தீண்டாமை சுவர் பிரச்சனை உச்சத்தில் இருந்த நேரம்...

உத்தப்புரம் நோக்கி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் பிருந்தா காரத் கட்சித் தோழர்களுடன் சென்றுகொண்டிருந்தபோது சட்டம் ஒழுங்கை காரணம் காட்டி, அரசியல் கட்சிகள் அங்கு செல்ல தடை விதித்திருப்பதாக போலீசார் அவரை வழிமறித்து கைது செய்து திருப்பரங்குன்றம் காவல் நிலையத்திற்கு அழைத்துவந்தனர். உத்தபுரத்திலுள்ள சாதி ஆதிக்க வெறியர்களால் சட்டம் ஒழுங்கு சந்திசிரித்ததால்தான் இந்தப் பிரச்சனையை தீண்டாமை ஒழிப்பு முன்னணியும், சிபிஎம்மும் கையில் எடுத்து வெளி உலகிற்குக் கொண்டு வந்தன. மேலும், சிபிஎம் தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் (பிள்ளைமார் ஓட்டுகள் போய்விடும் என்பதால்) அங்கு தவ்விக்கொண்டு போகவில்லை.

நடுப்பகல் நேரம் என்பதால், தோழர் பிருந்தா கைதுசெய்யப்பட்டு திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி மெல்ல மெல்லப் பரவி தோழர்கள் காவல் நிலையத்தில் குவியத் தொடங்கினார்கள். கைது செய்யப்பட்ட தோழர்கள் தவிர, மற்றவர்களை சாலையிலையே போலீசார் தடுத்து நிறுத்தி விட்டார்கள். ஆனாலும், உள்ளே தோழர் பிருந்தா போலீஸ்காரர்களை ஆவேசமான ஆங்கில மொழியில் போட்டு வறுத்து எடுப்பது அங்குவரை கேட்டது. "நாங்கள் அங்கு செல்வதால் எப்படி சட்ட ஒழுங்கு கெடும், அது எனக்கு இப்போதே தெரியவேண்டும்" என்று டி.எஸ்.பி.யை நோக்கி கேள்விக் கணைகளை விடுத்துக் கொண்டிருந்ததையும், தோழர்கள் கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்ததையும் கண்டு அப்போதுதான் அவருக்கு ஏதோ ஒரு பெரிய தலைவரை கைது செய்து விட்டோம் என்று உரைத்தது. இதற்கிடையில் மாவட்டத் தலைவர்கள் வந்து சமாதானம் சொல்லியும், அவர்களை அமரச் சொல்லிவிட்டு, வாக்குவாதத்தைத் தொடர்ந்தார். பிரச்சனை எஸ்.பி.க்கு போய், அவர் அங்கிருந்து "கைது செய்யும்போது யார் என்ன என்று விசாரிக்க வேண்டாமா? அவர் சிபிஎம் கட்சியின் முக்கியமான அகில இந்திய தலைவர்களில் ஒருவர். அவரை அங்கு நீண்ட நேரம் வைத்திருந்தால், பிரச்சனை பெரிதாகும். உடனே விடுதலை செய்யுங்கள்" என்று உத்தரவிடவும், அவர் தோழர் பிருந்தா அவர்களிடம் வந்து "சாரி மேடம், நீங்கள் போகலாம்" என்று

சொன்னதும், மேலும் கொதிக்க ஆரம்பித்தார்... "என்ன காரணத்திற்காக என்னை கைது செய்தீர்கள் என்பது முதலில் எனக்குத் தெரியவேண்டும். அடுத்து, இப்போது ஏன் விடுதலை செய்கிறீர்கள் என்ற காரணத்தைச் சொல்லவேண்டும். இது இரண்டுக்கும் விடை தெரியாமல், எத்தனை மணி நேரமானாலும் நான் இந்த இடத்தை விட்டுப் போகமாட்டேன்" என்று ஒரு ஒருமணி நேரத்திற்கும் மேலாக வாக்குவாதம் நடத்தி, "பிரச்சனை எங்கு இருக்கிறது, யாரால் ஏற்படுகிறது என்ற சரியான காரணத்தைக் கண்டறிந்து நடவடிக்கை எடுங்கள்" என்று அறிவுரை சொல்லிவிட்டு, மீண்டும் உத்தபுரம் பயணத்தை தொடர்ந்தார்.

நேற்று, டில்லி ஜஹாங்கீர்புரி இஸ்லாமியர் வீடுகளை நீதிமன்ற தடை உத்தரவையும் மீறி, பாஜக வசமுள்ள மாநகராட்சி அதிகாரிகள் புல்டோசர் மூலம் இடித்தபோது, ஆளும் ஆம் ஆத்மி கட்சித் தலைவர்களோ எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவர்களோ சம்பவ இடத்திற்கே வராத சூழலில், தோழர் பிருந்தா துணிச்சலுடன் தன்னந்தனியாக புல்டோசரை மறித்து தடுத்து நிறுத்தியது இந்தியா முழுவதும் பேசுபொருளாகி இருக்கிறது.

பட்டியல் சமூக மக்களானாலும், சிறுபான்மை சமூக மக்களானாலும் வஞ்சகங்களாலும், துரோகங்களாலும் துன்பத்திற்கு ஆளாகும் போது தங்கள் உயிரை துச்சமென நினைத்து களம் காணும் மகத்தான தலைவர்களைக் கொண்டது தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பதும், அப்படி ஒரு மகத்தான தலைவர்தான் தோழர் பிருந்தா என்பதும் மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியிருக்கிறது!

**லால்சலாம் காம்ரேட் பிருந்தா**

---

# மே 30 தோழர் கே. ரமணி நினைவு தினம்



பஞ்சாலை தொழிலாளியாக தனது வாழ்க்கையை துவக்கி மின்ஊழியர்கள், பஞ்சாலை தொழிலாளர்கள் உள்ளிட்ட தொழிலாளி வர்க்கத்திற்கு வழிகாட்டியாக உயர்ந்த தலைவர். காடம்பாறை போராட்டத்தில் ஒப்பந்த ஊழியரையும், நிரந்தர ஊழியரையும் ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து போராட்டத்தை கற்று தந்து சாதித்து காட்டியவர் வர்க்க ஒற்றுமையை உயர்த்தி பிடிப்பதே தோழர் கே.ஆர்.-க்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.



## மணமக்களுக்கு வாழ்த்துக்கள்

திருநெல்வேலி திட்டம் கல்லிடை குறிச்சி கோட்ம் கரிசல்பட்டி துணை மின் நிலையத்தில் மின்பாதை ஆய்வாளராக பணிபுரியும் தோழர் எஸ். செல்லப்பா அவர்கள் மகன்

**சி. சிவசங்கர் - டி. வசந்தமீனா**

இருவரின் திருமணம் 27.3.2022 அன்று நடைபெற்ற போது மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 500/- அளித்தார். வாழ்த்துக்கள்



# மாநில மகளிர் ஆணையமும் பெண்களின் பாதுகாப்பும்

கல்வி கற்கவும், பணி நிமித்தமும் பெண்கள் நகர்புறம் நோக்கி வருவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று அப்படி வரும் பெண்களை, குழந்தைகளை பாதுகாப்பதும், சமத்துவம் வழங்குவதும் அரசின் கடமையாகும்.

பெண்களுக்கெதிரான அனைத்து வகை இன்னல்களிலிருந்தும், பாது காப்பினை உறுதி செய்யவும், சமுதாயத்தில் தேவையான அதிகாரங்களைப்பெற்ற ஒரு சட்ட ரீதியான அமைப்பாக இருப்பது தான் மாநில மகளிர் ஆணையம்.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1992-ம் ஆண்டு அமைக்கப்பட்டு பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரித்து, பெண்களின் தனிப்பட்ட பிரச்சனைகளை கண்டறிந்து பெண்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை நிலை நாட்டவே அமைக்கப்பட்டது. இவ்வாணையத்தில் மாநில மகளிர் ஆணையத் தலைவி மற்றும் 9 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**ஆணையத்தின் குறிக்கோள்கள்**

1. மகளிரின் நலனை உறுதி செய்து அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.
2. பாலினப்பாகுபாடு குறித்த விவகாரங்களை கவனித்தல்.
3. பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக ஆணையத்தின் பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைத்தல்.

**மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள்**

1. இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சட்ட பிரிவுகள் பாதுகாப்புகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்கள் குறித்தான விபரங்களை கவனித்தல்.
2. பெண்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு நிறுவனங்கள் மூலம் முறையாக செயல்படுத்தாத போது அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்.
3. பெண்களுக்கு நீதி கிடைக்க தவறும் பட்சத்தில் தேவையான நீதியை பெறுவதற்கு உரிய சட்டதிருத்தம் மேற்கொள்ள அரசுக்கு பரிந்துரை செய்தல்.
4. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படும் நிகழ்வுகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல், பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும், இந்திய

அரசியலமைப்பு சட்டத்தில் கண்டுள்ள வாறு பாதுகாப்பிற்கான உத்திரவாதம் வழங்கப்படாத நிலையிலும் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காண மகளிர் ஆணையத்தை நேரிடையாக அனுகலாம்.

தமிழ்நாடு மகளிர் ஆணைய தலைவராக ஏ.எஸ். குமரி அவர்கள் பிப்ரவரி 17, 2022-ல் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது பேச்சும், செயலும் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. கடந்த 25.04.2022 அன்று பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறைகளுக்கு எதிராக தொடர்ந்து களத்தில் நின்று போராடி வரக்கூடிய பெண்கள் அமைப்புகளை உள்ளடக்கிய அனைத்து பெண்கள் கூட்டத்தை கூட்டி விவாதித்து ஆலோசனை வழங்ககோரி அழைத்தார்கள். 22 பெண்கள் அமைப்புகள் கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்கள்.

விவாதத்தில் பல்வேறு பிரச்சனைகளும் அதனை எதிர்கொள்ள எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் சொல்லப்பட்டது. பாலியல் புகார் கமிட்டி அரசு நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள், அமைப்புசாரா நிறுவனங்கள் என்று அனைத்து மட்டத்திலும் அமைக்க ஆலோசனை முன்வைக்கப்பட்டது. புகார் கமிட்டி மற்றும் குடும்ப வன்முறை, போஸ்கோ குற்றம் போன்வற்றில் தவறு ஏற்படும் போது யாரை தொடர்பு கொள்வது என்பதில் சிக்கல் இருக்கிறது. எனவே பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய தொலைபேசி எண்கள் அனைவருக்கும் தெரியும் விதத்தில் பள்ளி, கல்லூரி, பஸ் நிலையம், ரயில் நிலையம் என்று பொது இடங்களில் வைக்க வேண்டும் என்றும் ஆலோசனை வந்தது. வெளியூர்களில் இருந்து படிக்கவும், பணி செய்வதற்கும் வருபவர்கள் தங்கும் விடுதிக்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டி உள்ளது. அரசின் தங்கும் விடுதிகள் தேவை என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. வங்கி போன்ற முக்கிய நிறுவனங்களில் கூட பெண்களுக்கு தனியான கழிவறை இல்லாத சூழல் உள்ளது. எல்லா இடங்களிலும் பெண்களுக்கு தனியான கழிவறை உறுதி செய்யப்பட வேண்டும். புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு தங்கும் விடுதி அமைத்து தர வேண்டியுள்ளது. படிப்படியாக மதுபானக் கடைகள் குறைக்கப்பட வேண்டும் என்பன போன்ற ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டது.

மகளிர் ஆணையத் தலைவர் அவர்கள் இறுதியாக பேசும் பொழுது வந்த கருத்துகளை பிரித்து சமூக நலத்துறை கொடுக்க வேண்டியது, அமைச்சர்களிடம் கொடுக்க வேண்டியது, முறைப்படி சேர்க்கப்படும் என்றும்,

பெண்களுக்கு எங்கு பிரச்சனை என்றாலும் உடனடியாக எனது கவனத்திற்கு கொண்டு வாருங்கள் என்றும், எதாவது அசம்பாவிதங்கள் நடைபெற்றால் என்னை அழையுங்கள், நானும் உங்களோடு வருகிறேன் என்று சொன்னது நம்பிக்கை யளிக்கிறது என்று கூறியதோடு தனது தொலைபேசி எண்ணையும் கொடுத்து எந்த பிரச்சனையென்றாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம் என்ற வார்த்தை கவனிக் கத்தக்கது.

இந்த ஆரம்பம் நல்ல ஒரு பாதையில் மாநில மகளிர் ஆணையம் செல்கிறது என்ற எண்ணத்தை விதைத்திருக்கிறது. இந்த ஆணையம் பெண்கள் சம்மந்தப்பட்ட சட்டங்கள் பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற வேண்டும். காலம் இருக்கிறது கவனிப்போம்.

<u>தொடர்புக்கு</u>

**தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

கலச மஹால், சேப்பாக்கம்,

சென்னை - 60005

தொலைபேசி - 044-28592750, 044-28551155

**- தஞ்சை தனலட்சுமி**


கோரிக்கை ஆர்ப்பாட்டம்
இராமநாதபுரம்


விருதுநகர்


திருநெல்வேலி


திருவண்ணாமலை


வாரியத்தின் வருவாய்
திருப்பத்தூர்

Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 9.05.2022

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் 17வது மாநில மாநாடு
## சென்னை - ஆகஸ்ட் 2022
## வரவேற்புக்குழு அமைப்புக் கூட்டம்




Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.